16-2-1952 M.V.M BANGALORE 2

போர்வாள்

வாள் 5 வீசசு

16-2-52 சனிக்கிழமை

ஆசிரியர்க :

காஞ்சி. மணிமொழியார்

மா. இளஞ்செழியன் .A.Hons

துணை ஆசிரியர் :

காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை அணா 2

போதும் உங்கள் ஆட்சி! போய்வாருங்கள்!

படமுடியாது இனித் துயரம்! பட்டதெல்லாம் போதும்!

ஆந்திரநாடு அளித்த அருமையான தீர்ப்பு

★

ஒவ்வொரு தொகுதியிலேயும், காங்கிரஸ் அபேட்சகர் பெற்றுள்ள ஓட்டுக்கள் எவ்வளவு, காங்கிரசல்லாதார் பெற்றுள்ள ஓட்டுக்கள் எவ்வளவு என்பதைக் கணக்கெடுத்துப் பார்த்தால், எந்தெந்தத் தொகுதிகளிலே காங்கிரஸ் அபேட்சகர், காங்கிரசல்லாத அபேட்சகர்களைவிட அதிகப்படியான ஓட்டுகளைப் பெற்றிருக்கிறாரோ அந்தத் தொகுதிகளில் மட்டும் தான், காங்கிரஸ் கட்சி, பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கிறது என்று அர்த்தம்.

இந்தக் கணக்குப்படிப் பார்க்கிறபோது, மொத்தம் 190 தொகுதிகள் உள்ள தமிழ் நாட்டில் 29 தொகுதிகளிலும், மொத்தம் 29 தொகுதிகள் உள்ள கேரளநாட்டில் 0 (பூஜ்யம்)தொகுதிகளிலும், மொத்தம் 11 தொகுதிகள் உள்ள கன்னட நாட்டில் 3 தொகுதிகளிலும் மட்டுமே, காங்கிரஸ், பொதுமக்களால் விரும்பப்படுகிறது என்பதை, தொகுதிவாரிப் புள்ளி விவரங்களுடன் சென்ற வார இதழில் விளக்கிக் காட்டியிருந்தோம்.

இந்த இதழில், சென்னை மாகாணத்தின் மற்றொரு பகுதியாகிய ஆந்திர நாட்டிற்குரிய தொகுதிவாரிப் புள்ளிவிவரங்கள் கீழே தரப்பட்டிருக்கின்றன.

ஆந்திரநாட்டிற்குரிய மொத்தத் தொகுதிகள் 145.

இதிலே, காங்கிரஸ் அபேட்சகர், காங்கிரசல்லாத அபேட்சகர்களைவிட அதிகப்படியான ஓட்டுக்களைப் பெற்றிருக்கிற தொகுதிகள் 13-தான்.

ஆகவே 145 தொகுதிகள் உள்ள ஆந்திர நாட்டில் 13 தொகுதிகளில் மட்டும்தான் காங்கிரஸ் கட்சிக்குப் பொது மக்களிடையே செல்வாக்கு இருக்கிறது.

ஏனைய எல்லாத் தொகுதிகளில் உள்ள மக்களும் காங்கிரஸ் கட்சியை வெறுத்து ஒதுக்கி விட்டனர்.

போதும் உங்கள் ஆட்சி— போய்வாருங்கள் புனிதமூர்த்திகளே என்று காங்கிரஸ் ஆளவந்தார்களைப் பார்த்துக் கூறி விட்டனர்.

உங்கள் ஆட்சியின்கீழ் சிக்கிச் சிதைந்து நாங்கள் பட்ட துயரமெல்லாம் போதும் இனியும் படமுடியாது வேதனை என்று தீர்த்துச் சொல்லிவிட்டனர்.

தமிழ்நாடு

மொத்தமுள்ள தொகுதிகள்	190
காங்கிரசிடம் நம்பிக்கை தெரிவித்துள்ள தொகுதிகள்	29

காங்கிரசை விரும்பாத தொகுதிகள் 161

ஆந்திரநாடு

மொத்தமுள்ள தொகுதிகள் 145

காங்கிரசிடம் நம்பிக்கை தெரிவித்துள்ள தொகுதிகள் 13

காங்கிரசை விரும்பாத தொகுதிகள் 132

கேரளம்

மொத்தமுள்ள தொகுதிகள் 29

காங்கிரசிடம் நம்பிக்கை தெரிவித்துள்ள தொகுதிகள் 0

காங்கிரசை விரும்பாத தொகுதிகள் 29

கன்னடநாடு

மொத்தமுள்ள தொகுதிகள் 11

காங்கிரசிடம் நம்பிக்கை தெரிவித்துள்ள தொகுதிகள் 3

காங்கிரசை விரும்பாத தொகுதிகள் 8

சென்னை மாகாணம்

மொத்தமுள்ள தொகுதிகள் 375

காங்கிரசிடம் நம்பிக்கை தெரிவித்துள்ள தொகுதிகள் 45

காங்கிரசை விரும்பாத தொகுதிகள் 330

சென்னை மாகாணம், காங்கிரஸ் ஆட்சியை, முழுமனதுடன் வெறுத்து ஒதுக்கிவிட்டது என்பதை விளக்க இன்னமுமா ஆதாரம் தேவை?

மொத்தமுள்ள 375 தொகுதிகளிலே 330 தொகுதிகள் காங்கிரசை வெறுக்கின்றன என்னும் உண்மை திட்டவட்டமாகத் தெரிந்தபிறகும் கூட, சென்னை மாகாணம், காங்கிரசை விரும்பத்தான் செய்கிறது என்று யார் கூறமுடியும்?

எத்தனையோ தொகுதிகளிலே காங்கிரசை எதிர்த்து நின்ற அபேட்சகர்கள் ஒரே ஒரு ஆளாக இல்லாமல், நான்கு பேர் ஐந்துபேர் என்ற விதத்திலே இருந்தனர்.

அப்படி இருந்த காரணத்தாலேதான் காங்கிரசை விரும்பாத பொதுமக்களின் ஓட்டுகள் பலவாறு சிதறுண்டுபோய், காங்கிரசை விரும்பாத மக்களே பெரும்பான்மையினராக இருக்கும் தொகுதிகளில் கூட காங்கிரஸ் வெற்றிபெற முடிந்துவிட்டிருக்கிறது.

இதனாலேதான், மொத்தம் 45 தொகுதிகளில் மட்டுமே பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ள காங்கிரஸ், 152 எம். எல். ஏ. ஸ்தானங்களைக் கைப்பற்றி இருக்கிறது.

ஸ்தானங்கள் 152 ஐ காங்கிரஸ் கைப்பற்றிவிட்டது என்ற போதிலும், 45 தொகுதிகளில்தான் அது பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கிறது—330 தொகுதிகளில் அது பொதுமக்களால் வெறுக்கப்படுகிறது—ஆகவே சென்னை மாகாணம், காங்கிரஸ் கட்சியை ஒதுக்கித் தள்ளிவிட்டது என்கிற உண்மைகளை யாரும் மறுக்க முடியாது.

இதோ, ஆந்திர நாட்டின் தொகுதிவாரிப் புள்ளிவிவரங்கள்.

காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்திருக்கிற தொகுதிகளிலே, காங்கிரசல்லாதார் பெற்றுள்ள ஓட்டுகள், காங்கிரசார் பெற்றுள்ள ஓட்டுகளைவிட எவ்வளவு அதிகம் என்பதைக் கவனியுங்கள்.

காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றுள்ள தொகுதிகளிலே கூட, பல இடங்களிலே, காங்கிரசல்லாதார் பெற்றுள்ள ஓட்டுகளே காங்கிரசார் பெற்றுள்ள ஓட்டுகளைவிட அதிகமாயிருப்பதைக் கவனியுங்கள்.

காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்துள்ள தொகுதிகளில் ஓட்டுகளின் நிலைமை

சோடாவரம்
காங்கிரசு 8,849
அல்லாதார் 25,559

எல்லமான்சிலி
காங்கிரஸ் 11,536
அல்லாதார் 27,474

குண்டூர்
காங்கிரசு 11,359
அல்லாதார் 36,590

நரசராவ் பேட்டை
காங்கிரசு 24,911
அல்லாதார் 29,486

பொன்னூர்
காங்கிரசு 8,140
அல்லாதார் 46,145

சாத்தனபள்ளி
காங்கிரசு 9,157
அல்லாதார் 25,327

தார்சி
காங்கிரசு 6,139
அல்லாதார் 26,060

பெல்லம்கொண்டா
காங்கிரசு 12,505
அல்லாதார் 35,054

விநுகொண்டா
காங்கிரசு 4 332
அல்லாதார் 27,747

காவலி
காங்கிரசு 15,027
அல்லாதார் 34,078

குட்லிகி
காங்கிரசு 17,764
அல்லாதார் 29,447

பெல்லாரி
காங்கிரசு 17,219
அல்லாதார் 27,818

பழநாடு
காங்கிரஸ் 7,088
அல்லாதார் 28,828

அமலாபுரம்
காங்கிரஸ் 27,218
அல்லாதார் 80,180

ஷை (ரிசர்வ்)
காங்கிரஸ் 23,847
அல்லாதார் 88,334

கோவூர் (நெல்லூர்)
காங்கிரஸ் 9,290
அல்லாதார் 85,129

புருகுபூடி
காங்கிரசு 15.148
அல்லாதார் 37,484

உதயகிரி
காங்கிரஸ் 15,644
அல்லாதார் 20,566

கனிகிரி
காங்கிரஸ் 5,701
அல்லாதார் 30,385

ராஜமந்திரி
காங்கிரஸ் 12,228
அல்லாதார் 33,471

பத்ராசலம்
காங்கிரஸ் 18,637
அல்லாதார் 40 456

ஷை ரிசர்வ்
காங்கிரஸ் 18.396
அல்லாதார் 43,161

பியாகராவ் பேட்டை
காங்கிரஸ் 6,730
அல்லாதார் 16,108

சிலகலூரிபேட்டை
காங்கிரஸ் 10,265
அல்லாதார் 43 132

அநந்தபூர்
காங்கிரஸ் 13,667
அல்லாதார் 28,732

சிராலா
காங்கிரஸ் 5,123
அல்லாதார் 46,687

மதுகோல்
காங்கிரஸ் 7,304
அல்லாதார் 25,721

ஆனகாபல்லி
காங்கிரஸ் 9,797
அல்லாதார் 34,876

கோலுகொண்டா
காங்கிரஸ் 23,600
அல்லாதார் 26.519

ராசோல்
காங்கிரஸ் 23,118
அல்லாதார் 83,205

ஷை (ரிசர்வ்)
காங்கிரஸ் 27,311
அல்லாதார் 74.705

நெல்லூர்
காங்கிரஸ் 23,139
அல்லாதார் 59,558

ஷை (ரிசர்வ்)
காங்கிரஸ் 21,550
அல்லாதார் 31,588

விசாகப்பட்டினம்
காங்கிரஸ் 8,926
அல்லாதார் 25,785

அலமண்டா
காங்கிரசு 14,621
அல்லாதார் 32,073

பித்தாபுரம்
காங்கிரசு 12,438
அல்லாதார் 36,585

ஆத்மகூர்
காங்கிரசு 10 561
அல்லாதார் 20.682

தாட்பத்ரி
காங்கிரசு 15,455
அல்லாதார் 28.933

பாபட்லா
காங்கிரசு 20,399
அல்லாதார் 43.436

அடோனி
காங்கிரசு 26,513
அல்லாதார் 72,830

பரவாடா
காங்கிரசு 3,108
அல்லாதார் 24,404

சிருகுவரப்புகோடா
காங்கிரசு 5,571
அல்லாதார் 23,685

பீமுனிபட்டினம்
காங்கிரஸ் 5,769
அல்லாதார் 29,550

தோன்
காங்கிரஸ் 16,946
அல்லாதார் 30.550

இராமச்சந்திரபுரம்
காங்கிரஸ் 16,334
அல்லாதார் 30,603

தர்மாவரம்
காங்கிரஸ் 14 394
அல்லாதார் 32,241

மங்களகிரி
காங்கிரஸ் 8 594
அல்லாதார் 52,198

அமிர்தலூர்
காங்கிரஸ் 13,725
அல்லாதார் 41,439

காங்கிபாடு
காங்கிரஸ் 15,229
அல்லாதார் 35,742

பெனுகொண்டா
காங்கிரஸ் 14,237
அல்லாதார் 30,054

கோயில் குண்டலா
காங்கிரஸ் 24,002
அல்லாதார் 28,415

காஞ்சிகாசேலா
காங்கிரஸ் 14,788
அல்லாதார் 32,586

விஜயநகரம் (ரிசர்வ்)
காங்கிரஸ் 9.117
அல்லாதார் 56,256

பொப்பிலி
காங்கிரஸ் 19.105
அல்லாதார் 37,357

ஒங்கோல்
காங்கிரஸ் 9.809
அல்லாதார் 82.919

ஒங்கோல் (ரிசர்வ்)
காங்கிரஸ் 7,592
அல்லாதார் 68,416

ஜக்கய்யாப்பேட்டை
காங்கிரஸ் 8,550
அல்லாதார் 41,076

மடகாசிரா
காங்கிரஸ் 8,345
அல்லாதார் 36,900

குடிவாடா
காங்கிரஸ் 16 892
அல்லாதார் 1,15,361

குடிவாடா (ரிசர்வ்)
காங்கிரஸ் 20,087
அல்லாதார் 88,786

நரசபூர்
காங்கிரஸ் 5,118
அல்லாதார் 31,218

ஸ்ரீகாகுளம்
காங்கிரஸ் 15.028
அல்லாதார் 55.072

ஷை ரிசர்வ்
காங்கிரஸ் 16,222
அல்லாதார் 27.310

ஏலூரு
காங்கிரஸ் 12.991
அல்லாதார் 46,911

தணுகு
காங்கிரஸ் 14.398
அல்லாதார் 34,921

ஆலம்புரம்
காங்கிரஸ் 17,654
அல்லாதார் 28,221

ஜம்மலமடுகு
காங்கிரஸ் 22.410
அல்லாதார் 32,056

சிந்தலபூடி
காங்கிரஸ் 16,667
அல்லாதார் 35,565

புத்தூர்
காங்கிரஸ் 11,331
அல்லாதார் 37,500

(6-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

திராவிடர் வாரஇதழ்

சென்னை 16—2—52 சனிக்கிழமை

இங்கல்ல! இங்கிலாந்தில்!

ஆனால் இங்கே?

அக்டோபர் 25-ல் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

அக்டோபர் 27-க்குள் எல்லா முடிவுகளும் அறிவிக்கப்பட்டன.

அக்டோபர் 29-ல் புதுமந்திரி சபை அமைக்கப்பட்டுவிட்டது.

தேர்தல் விவகாரம் முழுவதும் நான்கே நாட்களுக்குள் முற்றுப் பெற்றுவிட்டன.

அக்டோபர் 25-ம் நாள் காலை ஒரு கட்சி நாட்டை ஆண்டு கொண்டிருந்தது.

அக்டோபர் 29-ம் நாள் காலை, அந்தக் கட்சி, மெஜாரிடி பெறத் தவறிவிட்டது என்பது தெரிந்துவிட்ட காரணத்தால், வேறு கட்சி ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துவிட்டது.

நான்கே நாட்களுக்குள் தேர்தல் பிரச்சினை தீர்த்துக் கட்டப்பட்டு, புது மந்திரிசபை அமைக்கப்பட்டு, நாட்டின் ஆட்சி சக்கரம் வழக்கம்போல் சுழலத் தொடங்கிவிட்டது.

எங்கே இவ்வளவு விரைவாகச் செயல்கள் நடைபெற்றிருக்கின்றன என்றுகேட்கிறீர்களா?

இங்கல்ல! இங்கிலாந்தில்!

ஆனால் நம் சென்னை மாகாணத்திலோ?

ஜனவரி 2-ம் தேதி முதல் 25-ம் தேதிவரை ஓட்டுப்போடுகிற செயல் தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது.

ஜனவரி 25-ம் தேதி முதல் பிப்ரவரி 10-ம் தேதிவரை ஓட்டு எண்ணுகிற செயல் நீண்டு சென்றிருக்கிறது.

புது மந்திரிசபை அமைக்கிற செயலோ இன்னும் முற்றுப் பெறவில்லை. மார்ச் 31-க்குப் பிறகு ஏப்ரல் முதல் வாரத்திலோ, அல்லது இரண்டாம் வாரத்திலோதான் அது நடந்து முடியுமாம்.

ஓட்டுப் போடுவதற்கு ஒரே ஒரு நாள்! ஓட்டுகளை எண்ணுவதற்கு இரண்டே நாள்! மந்திரி சபை அமைப்பதற்கு ஒரு நாள்! ஆக மொத்தம் நான்கே நாட்கள் தேர்தல் பிரச்சினைக்கு!—இது இங்கிலாந்தில்!

ஓட்டுப்போடுவதற்கு 23 நாள்! ஓட்டுகளை எண்ணுவதற்கு, அந்த 23 நாட்கள் போதாமல், மேற்கொண்டு 16 நாள்! மந்திரிசபை அமைப்பதற்கு, மேற்கொண்டு 50 நாள்! ஆகமொத்தம் தொண்ணூறு நாட்கள் தேர்தல் பிரச்சினைக்கு!—இது, சென்னை மாகாணத்தில்!

ஏன் இந்த வேறுபாடு?

ஒருவேளை சென்னை மாகாணம் இங்கிலாந்தை (பிரிட்டனை) விட அளவில் மிகப் பெரியதோ? அதெல்லாம் ஒன்றுமில்லை! ஏறத்தாழ இரண்டும் ஒரே அளவு உள்ளவைதான்!

ஒருக்கால், தேர்ந்தெடுக்கப்படவேண்டிய பிரதிநிதிகளின் எண்ணிக்கை, இங்கிலாந்தை விட சென்னை மாகாணத்தில் அதிகம் இருக்குமோ? அப்படியும் கூறுவதற்கில்லை! இங்கிலாந்தில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பிரதிநிதிகளின் எண்ணிக்கை 670. ஆனால் சென்னை மாகாணத்திலோ 375-தான்.

என்றாலும் அங்கே நான்கே நாட்களில் முடிகிற செயலுக்கு இங்கே மூன்று மாதங்கள் தேவைப்படுகின்றன.

ஏன் தெரியுமா?

காங்கிரஸ் கட்சியினரால் இந்த நாட்டில் தீட்டப்பட்டிருக்கிற அரசியல் திட்டம் இருக்கிறதே அது அவ்வளவு "அருமையான" முறையில் அமைந்திருக்கிறது.

தேர்தல் நடக்கிற நாளிலிருந்து ஒரு வார காலத்திற்குள் புது மந்திரி சபை அமைந்தாக வேண்டும் என்று, அரசியல் திட்டத்தில், ஒரு சிறு விதி நுழைக்கப்பட்டிருந்தால், புது மந்திரி சபை அமைக்க மூன்று மாதங்கள் ஆகாது.

பொது மக்களின் நம்பிக்கையை இழந்து, அவர்களால் ஓட ஓட விரட்டியடிக்கப்பட்ட ஒரு கட்சி, ஏதேதோ சாக்குகளைக் கூறிக்கொண்டு, மந்திரி

(15-ம் பக்கம் பார்க்க)

காமராஜர்களே! காமராஜர்களே! சற்று இங்கே வாரீர்

காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்துள்ள பரிசுகள்!

எத்தனை எத்தனை பாரீர்!

★

காமராஜர்களே! காமராஜர்களே!

உங்களைத்தான் அழைக்கிறேன்!

எங்கே இவ்வளவு அவசர அவசரமாகப் போகிறீர்கள்?

மந்திரிசபை அமைக்கவா?

அதற்குத்தான் வழியில்லாமல் போய்விட்டதே!

எதிர்க் கட்சிக்காரர்களின் கூட்டு மந்திரி சபை அமைவதைச் சூழ்ச்சிமுறைகளால் தடுத்து நிறுத்துவதற்கா?

அந்தப் "புண்ணிய காரியத்தை"ப் புரிவதற்குத்தான், காலம், இன்னமும் ஏராளமாக இருக்கிறதே!

தோற்றுப்போன ஆறு மந்திரிகளுக்கும் ஆறுதல் கூறி அவர்கள் உள்ளத்தைத் தேற்றுவதற்கா?

ஐயோ பாவம், அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை இனித் தேடிப் பிடிப்பதே கஷ்டமாயிற்றே!

இவ்வளவு வேகவேகமாக நீங்கள் போவது எந்தக் கோட்டையைப் பிடிப்பதற்கான எவ்வளவு மகத்தான காரியமாக இருந்தாலும் சரி, இரண்டு நிமிஷ நேரம், இதோ இப்படி அமருங்கள்!

உங்கள் அருமைக் காங்கிரஸ் கட்சிக்கு இந்தியத் துணைக் கண்டத்துப் பொதுமக்கள், இருபத்தேழு பரிசுகளைக் கொடுத்திருக்கிறார்கள்! அவை இதோ இருக்கின்றன! எடுத்துக்கொண்டு செல்லுங்கள்!

இந்தப் பரிசுகள் மிகவும் முக்கியமானவை!

உங்களுக்கென்றே பொதுமக்களால் அரிதின் முயன்று உருவாக்கப்பட்டிருப்பவை!

உங்களுடைய வாழ்நாள் அளவும் நீங்கள் போற்றிப் பாதுகாத்துக் காப்பாற்றி வைக்கவேண்டியவை!

ஆமாம், காமராஜர்களே, உங்களுடைய சென்ற ஐந்தாண்டு கால ஆட்சிப் பீட "சேவை"யைப் "பாராட்டி" மக்கள் மன்றம் அளித்துள்ள அன்புப் பரிசுகள் இவை!

உங்களுக்குக் கிடைத்துள்ள அந்த இருபத்தேழு பரிசுகளையும் இதோ ஒவ்வொன்றாக எடுத்து உங்கள்முன் வைக்கின்றேன்.

கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்.

ஏதாவது ஒன்றிரண்டு பரிசுகளை நான் எடுத்துவைக்க மறந்துவிட்டால் நினைவுப்படுத்துங்கள்—அவற்றையும் உடனே எடுத்துத் தருகிறேன்.

இதோ, "பரிசுகள்"! மக்கள் மன்றம் உங்கட்குத் தந்துள்ள "அன்பளிப்புகள்"!

சென்னை

1. குமாரசாமி ராஜா—பிரதம மந்திரி
2. பக்தவத்சலம் — ராமத்து மந்திரி.
3. மாதவ மேனன்—சட்டம், கல்வி, மந்திரி.
4. கோபால ரெட்டி—நிதி மந்திரி
5. சந்திரமவுலி—ஸ்தலஸ்தாபன மந்திரி
6. காளா வெங்கட்ராவ்—சுகாதார மந்திரி

மைசூர்

7. எச். சி. தாசப்பா—நிதி மந்திரி

மத்ய பாரத்

8. ஜக்மோகன்லால் ஸ்ரீவத்சவா—சட்டமந்திரி
9. தகத்மல் ஜெயின்—பிரதம மந்திரி
10. ஹமீது அலி—துணை மந்திரி
11. சுன்னலால்—துணை மந்திரி

பம்பாய்

12. மொரார்ஜி தேசாய்—உள்நாட்டு மந்திரி

ராஜஸ்தான்

13. ஸ்ரீகும்பா—ஸ்தல தாபன மந்திரி
14. ராம் ஆர்யா—நிதி மந்திரி
15. ஜெய நாராயண வியாஸ்—முதல் மந்திரி

மேற்கு வங்காளம்

16. பிரபுல்ல சென் — உணவு மந்திரி
17. நிஹரேந்துதட் மஜூம்தார்—சட்ட மந்திரி
18. காளிபாத முகர்ஜி—தொழிலாளர் மந்திரி
19. பூபதி மஜூம்தார்—நீர்ப்பாசன மந்திரி
20. நிகுஞ்சமைதி—சப்ளை மந்திரி
21. பிமல் சந்திர சின்ஹா—ராமத்து மந்திரி
22. ராய் ஹரேந்திரநாத் சவுத்ரி—கல்வி மந்திரி

பீகார்

23. பண்டித வினோதானந்தஜா—ஸ்தல ஸ்தாபன மந்திரி

ஒரிசா

24. நபகிருஷ்ண ஸ்ரீ... கபிலேசுவர பிரசாத் நந்தா—ஸ்தல ஸ்தாபன மந்திரி

மத்ய பிரதேஷ்

25. ராமேஷ்வர அக்னி போஜ்—ராமத் மந்திரி

மத்ய சர்க்கார், டில்லி

26 சந்தானம்—உதவி ரயில் மந்திரி
27. திருமல்ராவ்—உதவி உணவு மந்திரி

(16-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நந்தியால்
காங்கிரஸ் 20 196
அல்லாதார் 33 037

விஜயவாடா
காங்கிரஸ் 13,574
அல்லாதார் 32 095

திருவூர்
காங்கிரஸ் 13 284
அல்லாதார் 47,241

பந்தர்
காங்கிரஸ் 17,309
அல்லாதார் 39,783

படவேல்
காங்கிரஸ் 16,686
அல்லாதார் 25,281

தெக்காலி
காங்கிரஸ் 8 628
அல்லாதார் 24,089

நந்திகோடூர்
காங்கிரஸ் 13 341
அல்லாதார் 33.376

பொப்பிலி
காங்கிரஸ் 13,877
அல்லாதார் 23,033

கமலாபுரம்
காங்கிரஸ் 19,785
அல்லாதார் 28,680

நரசபூர்
காங்கிரஸ் 27,016
அல்லாதார் 63 441

ஷை ரிசர்வ்
காங்கிரஸ் 27,512
அல்லாதார் 78,493

சாலூர்
காங்கிரஸ் 6,760
அல்லாதார் 29,682

மதனபல்லி
காங்கிரஸ் 5,712
அல்லாதார் 35,096

தினி
காங்கிரஸ் 24,465
அல்லாதார் 89,296

தினி (ரிசர்வ்)
காங்கிரஸ் 17,226
அல்லாதார் 62,381

கொவ்வூர் (கோதாவரி)
காங்கிரஸ் 25,930
அல்லாதார் 83,581

கொவ்வூர் (ரிசர்வ்)
காங்கிரஸ் 18,091
அல்லாதார் 57,698

இச்சாபுரம்
காங்கிரஸ் 7,501
அல்லாதார் 29 916

ராஜாம்பேட்டை
காங்கிரஸ் 16 519
அல்லாதார் 67,849

சீபுரபல்லி
காங்கிரஸ் 15 888
அல்லாதார் 77 987

ராயசோட்டி
காங்கிரஸ் 7,444
அல்லாதார் 47,371

பிலேரு
காங்கிரஸ் 11,928
அல்லாதார் 32,621

காக்கினடா
காங்கிரஸ் 22,486
அல்லாதார் 62,079

ஷை (ரிசர்வ்)
காங்கிரஸ் 19,968
அல்லாதார் 56.704

காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றுள்ள தொகுதிகளில் ஓட்டுகளின் நிலைமை

தூனி
காங்கிரஸ் 20,498
அல்லாதார் 26,496

வெங்கடகிரி
காங்கிரஸ் 23,5[illegible]7
அல்லாதார் 25,328

ராபூர்
காங்கிரஸ் 10.305
அல்லாதார் 28,410

கூடூர்
காங்கிரஸ் 18,175
அல்லாதார் 26.423

சிறுகுப்பா
காங்கிரஸ் 17,798
அல்லாதார் 17.594

பமாரு
காங்கிரஸ் 23.405
அல்லாதார் 24,376

பெத்தாபுரம்
காங்கிரஸ் 10,337
அல்லாதார் 24.514

ஹார்பனஹல்லி
காங்கிரஸ் 26,425
அல்லாதார் 25,261

பிரதிபாடு
காங்கிரஸ் 16,130
அல்லாதார் 41 988

அனபர்டி
காங்கிரஸ் 16 143
அல்லாதார் 30,61[illegible]

கதிரி
காங்கிரஸ் 19 696
அல்லாதார் 21 184

துக்கிராலா
காங்கிரஸ் 10 002
அல்லாதார் 26 648

அடோனி (ரிசர்வ்)
காங்கிரஸ் 30,667
அல்லாதார் 18,062

தெனலி
காங்கிரசு 19,484
அல்லாதார் 25,720

கைக்காலூர்
காங்கிரசு 17,952
அல்லாதார் 30,275

நஜ்விட்
காங்கிரசு 30,671
அல்லாதார் 24,607

ஹிந்துபூர்
காங்கிரசு 13,868
அல்லாதார் 26,816

தாடேபல்லிகுடம்
காங்கிரசு 19 844
அல்லாதார் 24,355

கண்டுகூர்
காங்கிரசு 20,101
அல்லாதார் 45,511

ஷை (ரிசர்வ்)
காங்கிரஸ் 19,764
அல்லாதார் 30.240

கர்னூல்
காங்கிரசு 23,484
அல்லாதார் 63,625

கர்னூல் (ரிசர்வ்)
காங்கிரசு 24 542
அல்லாதார் 17,046

கல்யாண்துருக்கம்
காங்கிரசு 28,118
அல்லாதார் 76,653

ஷை (ரிசர்வ்)
காங்கிரசு 16,225
அல்லாதார் 12,542

இராயதுருக்கம்
காங்கிரசு 20,812
அல்லாதார் 7.694

ஹோஸ்பேட்
காங்கிரசு 26,339
அல்லாதார் 17,356

சிறு கதை

பொங்கல் பரிசு!

[கே. ஏ. வகாப்]

அன்று அந்த சினிமாவில் ஒரு நல்ல புதுப்படம் ஆரம்பம். வெல்லத்தைச் சுற்றி வரும் எறும்புக் கூட்டத்தைப்போல் மக்கள் கூட்டம் கொட்டகையைச் சூழ்ந்திருந்தது. குறைந்த வகுப்பு டிக்கட் பிரிவிலே குழப்பம் மிகுந்திருந்தது. ஆனால் உயர்ந்தவகுப்பு டிக்கட் கொடுக்குமிடத்தில் மக்கள் அமைதியான முறையிலே 'கியூ' வரிசையில் நின்று டிக்கட் வாங்கிக்கொண்டிருந்தனர். திடீரென்று அந்த வரிசையிலே ஒரு பரபரப்பு ஏற்பட்டது. அந்த வரிசையில் இருந்தவர்களில் ஒருவர் தன் ஜேபியில் புகுந்த கையைப்பிடித்துக்கொண்டு திருட்டு நாயே எங்கேடா உன் வேலையைக் காண்பிக்கிறே என்று கூறி 'படார், படார் என்று இரண்டு அறைகள் கொடுத்தார் திருடனின் கன்னத்தில்! ஐயோ என்ற அலறலுடன் அவன் கன்னத்தைப் பிடித்துக்கொண்டான். சிறிது நேரத்தில் போலிசார் வசம் ஒப்புவிக்கப்பட்டு ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டான் சந்தனம். ஆம் அந்தத் திருடனின் பெயர் சந்தனம் தான். அந்தப் பெயரை அவனுக்கு எந்த அறிவாளி வைத்தாரோ தெரியவில்லை! உண்மையிலேயே அவன் சந்தனமாக இல்லை! சாக்கடையாகத்தானிருந்தான்!

சப் இன்சுபெக்டர், நாற்காலியில் கம்பிரமாக உட்கார்ந்து கொண்டிருந்தார். வெளிறிய முகத்தோடு சந்தனம் எதிரில் நின்றுகொண்டிருந்தான்.

"நீ திருடியது உண்மைதானே?' இது சப் இன்சுபெக்டர்.

"திருடிவிடவில்லை ஆனால் திருட முயன்றது உண்மை" சந்தனத்தின் மிடுக்கான குரல்

"ஏன் திருடினாய்"—மறுபடியும் கேள்வி.

"நானு திருடினேன், சமூகம், வாழ்க்கை, என்னைத் திருடவேண்டிய நிலைக்குக் கொண்டுவந்து விட்டிருக்கிறது."

"கொட்டாப்புளி மாதிரி இருக்கின்றாயே, வேலை செய்து பிழைத்தால் என்ன?. திருடுவது உனக்கு வெட்கமாயில்லை?"

"வெட்கப்படவேண்டிய அவசியமே இல்லை, மானம் வெட்கம், மரியாதை இவையெல்லாம் துறக்காமல் எப்படி இத் தொழிலில் ஈடுபட முடியும்?"

"அதுசரி! குற்றத்தை ஒரு சாதாரண திருடனைப்போல் மறுத்துப் பேசாமல் உடனே ஒப்புக்கொள்ளுகின்றாயே அது ஏன்?'—அனுதாபம் கலந்த ஐயம் அவருக்கு எழுந்தது.

"ஐயா! நான் என்னுடைய வரண்ட வாழ்வைச் சொல்லுகின்றேன் விரும்பினுல் கேளுங்கள். நான் குற்றத்தை ஒப்புக்கொள்வதற்குக் காரணம் அப்பொழுது தெரியும் உங்களுக்கு:"

சிறிது நேரம் மௌனமாக இருந்தார் சப் இன்சுபெக்டர். அவருக்கு என்ன தோன்றியதோ,

"சொல்லேன் கேட்போம்," என்றுர். சந்தனம் சொல்ல ஆரம்பித்தான்.

"மக்கள் உழைப்பை அட்டைபோல் உறிஞ்சி, வெல்லம் போல் விழுங்கும் பணக்காரப் பரம்பரையில் பிறக்கவில்லை நான். இரத்தம் சிந்தி எலும்பு முறிய உழைத்து அதில் வரும் ஊதியத்தில் அன்றுடம் காய்ச்சிக் குடிக்கும் அன்னக்காவடிகளாகிய தாய் தந்தையருக்குத் தான் பிறந்தேன். வறுமைக்கிடையே என்னைவளர்த்து ஒருவனிடமெனக்குத் துணைவியாக்கிவிட்டு இம்மண்ணுலகை நீத்தனர் என் பெற்றேர். வாழையடி வாழையாக வறுமையும் என்னைத் தொடர்ந்தது. வறுமையை விரட்ட நான் படாதபாடில்லை. உழைக்காத உழைப்பில்லை. பிழைக்கப்பல வழிகளில் முயன்றேன் கடைசியாக ஒரு வாடகை ரிக்ஷா வாங்கி, செல்லாதவரிடமெல்லாம் சென்று 'ஏறுங்கள் என் ரிக்ஷாவில். பஞ்சாய்ப் பறப்பேன் நான்" என்று கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டேன், தாரொழுகும் தெருக்களெல்லாம் தலைதெறிக்க ஓடினேன்.

"நம்ம 200 பவுண்ட் எடையை மாடுபோல் இழுத்து வந்தானே இவன்" என்று மனம் இறங்கி, ரிக்ஷாவில் ஏறிவந்தவர்கள் அதிக கூலி கொடுத்தார்களா என்ன? முன்பு பேசிய தொகையிலே பாதி குறைத்துக் கொடுத்தனர். நியாயம் கேட்டதற்குப் போடா நாயே என்றனர். ஒரு சாமான்யனுகிய நான் அவர்களை என்ன செய்ய முடியும்? அவர்களெல்லாம் பெரிய மனிதர்கள்!

ரிக்ஷாவிலே போதிய ஊதியமில்லை என்று தெரிந்ததும் பொதி சுமக்கும் வேலையைத் துவங்கினேன். இரவும் பகலும் ரயில்வேஸ்டேஷனில் 'கூலி...கூலி' என்று கத்தினதால் என் தொண்டைதான் வலித்தது. 'கூலி' என்று கத்தினதற்குக் கூட கூலி கிடைக்கவில்லை. என் ஆசைமனைவியோ ஒரு பிள்ளையைப் பெற்றுவிட்டு மரணப் படுக்கையில் கிடந்தாள். அவளுக்கு மருந்துவாங்கக் கூட என்கையில் பணமில்லை. எத்தனையோ பெரிய மனிதர்களிடம் உதவிகேட்டேன். ஆனால் அத்தனைபேரும் செய்ய மறுத்துவிட்டனர். இந்தப் பரந்தபாரில் எனக்கு உதவிசெய்ய எவரும் முன்வரவில்லை. என் துணைவி மனக்கவலையாலும் உடல் நோயாலும் நயவஞ்சகம் வாழும் இவ்வுலகைவிட்டுப் பிரிந்துபோய்விட்டாள். என் தலையில் கல்லைப் போட்டுவிட்டுப் பச்சிளம் குழந்தையைப் பரிதவிக்க விட்டுவிட்டுச் சென்றுவிட்டாள். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. தாயின்றி வாடும் குழந்தையைக் கவனிப்பேனு? வயிற்றுணவிற்குப் பணம் தேடுவேனு? எதைச் செய்வேன் நான்? பிறந்ததும் இறந்துபோய் விடுகின்றனவே எத்தனையோ குழந்தைகள், அதுபோல இறந்தாவது போயிருக்கக்கூடாதா அந்தக் குழந்தை! அது இறக்கவுமில்லை பிழைக்கவுமில்லை. ஆனால் நான் மட்டும் என் அன்பனைத்தும், ஏன், என் உயிரையே அதன்மேல் வைத்திருந்தேன். ஆனால் அது ஆண் குழந்தை கூட இல்லை, பெண் குழந்தை! தாயைப்போன்ற

(14-ம் பக்கம் பார்க்க)

★ முதுகை நெறிக்கிறார் முனிபுங்கவர்! ஆதரவு காட்டுகிறார் ஆபத்பாந்தவர்! ★

பிரமச்சாரியின் போர்க் கோலம்!
சென்னை மித்திரனின் 'சபாஷ்' பட்டம்!

பத்தாம் பசலியின் சலசலப்பு!
பஞ்சாங்கக் குப்பையின் பதைபதைப்பு!

இந்துச் சட்ட மசோதாவை
எதிர்ப்போரின் உள நோக்கம்

ஆனைக்குண்டைவிடப் பலம் பொருந்திய பணக் குண்டைக் கையில் ஏந்திக்கொண்டு தேர்தல் போராட்டத்தில் ஈடுபட்டார் பெருமுதலாளி கோயங்கா. ஆனால் செந்தமிழ்ச் சுவடி திருக்குறள் ஒன்றைமட்டுமே கையிலேந்தியபடி தேர்தல் பிரசாரத்தில் குதித்து, கோயங்காவை முறியடித்து, வெற்றிக் கொடியை உயர்த்திப் பிடித்தார் ஏழைகளின் தோழர் திருக்குறள் முனுசாமி! பணக்கோட்டையின் பிரதிநிதி கோயங்காவையே தோற்கடித்த இந்த முனுசாமி, யார் — எப்படிப்பட்டவர் — இவருடைய வாழ்க்கை வரலாறு யாது—என்பன போன்ற விவரங்களை எடுத்து எழுத வேண்டுமே என்ற எண்ணம் துளியும் ஏற்படவில்லை சுதேசமித்திரனுக்கு!

டாக்டர் சுப்பராயன், காங்கிரஸ் கட்சியின் மா பெருந்தலைவர்களில் ஒருவர். சென்னை மாகாணத்தின் முன்னாள் பிரதமர். இந்தோனீஷ்யாவில் இந்தியாவின் தூதுவராக ஜொலித்தவர். முப்பதாண்டுக் காலமாகப் பொதுவாழ்வில் உலவி வருபவர். இவ்வளவு சிறப்பும் செல்வாக்கும் மிக்கவரைத் தோற்றேன் தோற்றேன் என்று பதறி அலறிப் புறமுதுகிட்டோடும்படி செய்தார் பேபி கந்தசாமி என்பவர். அந்தப் பேபி கந்தசாமியினுடைய புகைப்படத்தை வெளியிட்டு அவருடைய அருமை பெருமைகளைப் பொது மக்களுக்கு விளக்கவேண்டியது தன்னுடைய இன்றியமையாத கடமை என்ற உணர்ச்சி உண்டாகவில்லை சுதேசமித்திரனுக்கு!

சத்திய மூர்த்தியின் பிரதம சிஷ்யர்—காங்கிரஸ் கட்சியின் பிரசார பீரங்கி...தமிழ நாட்டுக் காங்கிரசின் தவப்புதல்வர்களில் ஒருவர்—எதிர்க் கட்சிகளுக்குச் சவுக்கடி கொடுப்பதில் ஈடு இணை அற்றவர்—பாராளுமன்றக் கலையிலே நிகரற்ற பயிற்சி உடையவர் என்றெல்லாம் புகழ்ப்பட்ட காங்கிரச சிங்கம் தோழர் செங்கல்வராயன்! அப்படிப்பட்ட "ஆற்றல் வீரரை" ஓட ஓட விரட்டியடித்துத் தோல்விப் பாதாளத்தில் சுருண்டு விழும்படிச் செய்தார் டாக்டர் கிருஷ்ணசாமி! அந்தக் கிருஷ்ணசாமியின் அறிவு ஆற்றல்களை அழகுபட எடுத்து எழுதவேண்டியது அவசியம் என்று கருதவில்லை சுதேசமித்திரன்.

திருச்சி மாவட்டத்தின் காங்கிரஸ் தூண் ஸ்ரீமான் ஹாலாஸ்யத்தைப் பெருவாரியான ஓட்டுகளால் தோற்கடித்து வெற்றிமாலை சூடினார் திருச்சி டாக்டர் மதுரம். அந்த மதுரத்தின் மாண்புகளையும் முன்னாள் வாழ்க்கை வரலாற்றினையும் அறியப் பேராவல் கொண்டுள்ளனர் பொது மக்கள். ஆனால் அந்தப் பேராவலை நிறைவு செய்யக் கொஞ்சமும் முன்வரவில்லை சென்னைத் தினசரி சுதேசமித்திரன்.

அகில இந்திய காங்கிரசின் காரியக்கமிட்டி உறுப்பினராகத் திகழ்பவரும், ஆச்சாரியார் ஆட்சிக் காலத்தில் அவருடைய அருமை அமைச்சர்களில் ஒருவராகப் பவனி வந்தவரும், காங்கிரசு ஹரிஜன் தலைவர்களுள் தலைசிறந்தவர் என்று புகழப்படுபவருமாகிய தோழர் வி. ஐ. முனுசாமிப் பிள்ளையை, திண்டிவனம் தொகுதியில், தோழர் ஜெயராம் என்பவர் தோற்கடித்தார். வெற்றி வீரர் ஜெயராம் பற்றி விளக்கவுரை தராவிட்டாலும் சுருக்கமாகவாவது எழுதியிருக்க வேண்டும் சுதேசமித்திரன். எழுதிற்று ஒரு வரியாவது? இல்லை! ஒரு எழுத்துகூட எழுதவில்லை!

சிறைச்சாலைக்குள்ளே, நாகிரெட்டி! வெளியே, சகல சுதந்தரங்களுடன், ஆந்திர மாகாண காங்கிரசு தலைவர் சஞ்சீவிரெட்டி! இருவருக்குமிடையேபோட்டி! ஆனால் வெற்றி பெற்றவர் சஞ்சீவி ரெட்டியல்ல—நாகி ரெட்டி! ஒரு மாகாண காங்கிரசு கட்சிக்குத் தலைவராக இருக்கும் ஒரு பெரிய புள்ளியை, சிறைச்சாலைக்குள் அடைப்பட்டுக் கிடக்கும் அரசியல்வாதி ஒருவர் தோற்கடித்துவிட்டார் என்றால் அந்த அரசியல்வாதியின் வாழ்க்கைக் குறிப்புகளைத் தெரிந்து கொள்ள எவ்வளவு ஆர்வம் கொண்டிருப்பர் நாட்டின் மக்கள்? அவருடைய வாழ்க்கைக்குறிப்புக்களைத் தெரிவித்து அந்த ஆர்வத்தை அணைத்ததா மித்திரன்? கிடையாது! நிச்சயமாகக் கிடையாது!

"மணலி கந்தசாமியை உயிருடனோ பிணமாகவோ சர்க்காரிடம் காட்டுபவர்கட்கு ரூபாய் ஆயிரம் இனாம் தரப்படும்" என்கிற நோட்டீஸ் போலீஸ் சாவடிகளிலே தொங்கவிடப்பட்டிருக்கிறது. எனவே தோழர் கந்தசாமி வெளியே தலைகாட்ட முடியாது. ஆனால் அவரை எதிர்த்துப் போட்டியிடுகிற காங்கிரஸ் அபேட்சகரோ தாராளமாக நடமாடி, ஏராளமான அளவுக்குத் தேர்தல் வேலையில் ஈடுபடமுடியும். இவ்வளவு சங்கடமான நிலையிலேயும் வெற்றிபெற்றவர் தோழர் கந்தசாமி! தோல்விபெற்றவர் காங்கிரஸ் பிரதிநிதி! தலைமறைவாக இருந்துகொண்டே வெற்றி பெறுகிற அளவுக்குப் பொதுமக்களிடத்தில் செல்வாக்குப் பெற்றிருக்கிற இந்த விசித்திரபுருஷர் கந்தசாமியை மக்கள் மன்றத்துக்கு அறிமுகப்படுத்தவேண்டாமா மித்திரன்? அறிமுகப்படுத்திற்று? இல்லை!

கோயங்காவை முறியடித்த திருக்குறளார், ஜெமீன்தார் சுப்பராயனைத் தோற்றோடச் செய்த பேபி கந்தசாமி, ஹாலஸ்யத்தை விரட்டியடித்த டாக்டர் மதுரம், வழக்கறிஞர் செங்கல்வராயனுக்குத் தோல்வி மாலையைச் சூட்டிய டாக்டர் கிருஷ்ணசாமி, சிறைச்சாலைக்குள் இருந்துகொண்டே வெற்றிபெற்ற நாகிரெட்டி, தலைமறைவாய் இருந்தபடி வெற்றிமாலை சூடிய மணலி கந்தசாமி, இவர்களிலே ஒருவரைக்கூட, படம்போட்டுக் காட்டி, வாழ்க்கை வரலாற்றைத் தீட்டிப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தவில்லை சென்னைத் தினசரி சுதேசமித்திரன்.

இதிலென்ன ஆச்சரியம்? சுதேசமித்திரனோ காங்கிரஸ் ஏடு! நீ குறிப்பிடும் தோழர்களோ, காங்கிரசை எதிர்த்து வெற்றிமாலை சூடியிருப்பவர்கள்! ஒரு காங்கிரஸ் பத்திரிகை, காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட தோழர்களின் படங்களை வெளியிட்டு வாழ்க்கைக் குறிப்புகளை எழுதவில்லை என்றால் எப்படி எழுதும்?—என்று, வாசகர்கள், நம்மைப் பார்த்துக் கேட்பது நம் காதில் விழாமல் போகவில்லை.

வாசகர்கள் மட்டும்தானா, நாமேகூட அப்படித்தான் கேட்டிருப்போம், 2—2—52-க்கு முன்னாள் வரையிலே!

"இது சகஜம்தானே தோழா! காங்கிரஸ் மித்திரன், காங்கிரஸ் எதிர்ப்பாளர்களைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளை எப்படியப்பா வெளியிடும்?" என்றுதான் நாமும் கேட்டிருப்போம்.

ஆனால் 2—2—52-ம் நாளன்று வெளியான சுதேசமித்திரனில், காங்கிரசை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிடுகிற ஓர் அபேட்சகருடைய படம் பெரிய அளவில் பிரசுரிக்கப்பட்டு, அதன் பக்கத்தில், அவருடைய வாழ்க்கை வரலாறு ஏறத்தாழ அரைப் பக்கம் அளவிலே வெளியிடப்பட்டிருக்கிறது.

அந்த அபேட்சகர் எதிர்த்துநிற்பது ஒரு சாதாரண காங்கிரஸ் தொண்டரை அல்ல! அகில இந்திய காங்கிரசின் இருதய தீபம் பண்டித ஜவஹர்லால் நேருவை!

பண்டித நேரு, மனிதருள் மாணிக்கம் என்று உத்தமர் காந்தியாரால் பாராட்டிப் புகழப்பட்டவர். இந்தியாவின் முடிசூடாமன்னர் என்று பாரதபுத்திரர்களால் நித்தநித்தம் போற்றப்படுபவர். அகில உலகிலேயும் புகழ்நனி வீசித் திகழ்பவர். காங்கிரஸ் கட்சியின் தனிப்பெருந் தலைவர். ஆயிரமாயிரம் தேசிய இளைஞர்களின் இருதய கமலத்தில் வீற்றிருக்கும் சிறப்பும் செல்வாக்கும் மிக்கவர். அப்படிப்பட்ட மாபெருந் தலைவரை எதிர்த்து நிற்கிறார் ஓர் அபேட்சகர். அந்த அபேட்சகருடைய படத்தைப் பெரிய அளவில் வெளியிட்டு, அவருடைய வாழ்க்கை வரலாற்றை, மிகப் பெரிய அளவில், அனைவருடைய கவனத்தையும் கவரத்தக்க முறையில் வெளியிட்டிருக்கிறது சுதேசமித்திரன்.

முந்திரிக்கொட்டை அளவுள்ள பெரிய எழுத்துக்களில், அரைப்பக்க அகலத்திற்கு நீண்டு செல்லும் விதத்தில், அந்த வாழ்க்கை வரலாற்றிற்குத் தலைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

2—2—52-ம் நாள் வெளியான சுதேசமித்திரனைக் காணநேர்பவர்கள் எவரும் அந்தக் கட்டுரையைப் படிக்காமல் இருக்கமாட்டார்கள். அவ்வளவு சிறப்பான இடத்தில், அவ்வளவு பெரிய தலைப்புடன், அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டிருக்கிறது அந்தக் கட்டுரை.

டாக்டர் சுப்பராயன், டி. செங்கல்வராயன், ஸ்ரீமான் ஹாலாஸ்யம், சஞ்சீவிரெட்டி, ராமநாத் கோயங்கா, வி. ஐ. முனுசாமிப்பிள்ளை முதலான காங்கிரஸ்வாதிகள் பண்டித நேருவோடு ஒப்பிட்டுப் பார்த்திடப்போது மிகமிகச் சாமான்யர்கள். ஆனால் அந்தச் சாமான்யர்களை எதிர்த்து நின்ற அபேட்சகர்களின் படங்களை வெளியிடாத மித்திரன், அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புகளை அழகுபட எடுத்து எழுதாத மித்திரன், பண்டித நேருவையே எதிர்த்து நிற்கிற ஒரு அபேட்சகரின் படத்தை வெளியிட்டு வாழ்க்கை வரலாற்றினையும் தீட்டியிருக்கிறது.

திருக்குறள் முனுசாமி, டாக்டர் மதுரம், பேபி கந்தசாமி, தோழர் ஜெயராமன், டாக்டர் கிருஷ்ணசாமி முதலானவர்களுடைய படத்தை வெளியிடாத மித்திரன், இவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைத் தீட்டிக் காட்டாத மித்திரன், பண்டிநேருவை எதிர்த்துநிற்கும் அபேட்சகரை மட்டும் பிரமாதப்படுத்திக் காட்டுவதன் உள் மர்மம் என்ன?

பண்டித நேருவை எதிர்த்துநிற்கும் அந்த அபேட்சகர்—அவர் பெயர் பிரபுதத்த பிரமச்சாரியாம்—அவரென்ன திருக்குறள் முனுசாமியாரைவிட இலக்கியத் துறையிலே புலமை நிறைந்தவரா? கிடையாதே!

அல்லது, டாக்டர் கிருஷ்ணசாமியாரைவிட அகில உலக அறிவும், அரசியல் துறையில் ஆற்றலும் மிகுந்தவரா? இல்லையே!

அல்லது திருச்சிவீரர் டாக்டர் மதுரம் அவர்களைவிட உலக அனுபவமும் பொதுமக்களுக்குத் தொண்டு புரியும் ஆர்வமும் நிறைந்தவரா? அதுவும் கிடையாதே!

அல்லது, மணலி கந்தசாமியைவிட தியாகத் தீயிலே அதிக முறை குதித்தெழுந்தவரா? அப்படியும் கூற முடியாதே!

அல்லது, தோழர் ராமமூர்த்தி, அகந்த நம்பியார், ஏ. கே. கோபாலன், நாகிரெட்டி முதலிய அஞ்சா நெஞ்சர்களைவிட நெஞ்சு உரமும் தைரிய சுபாவமும் படைத்தவரோ அந்தப் பிரபுதத்த பிரமச்சாரி? அவ்வாறு கூறுவதற்கும் ஆதாரம் எதுவும் காணோமே!

இவர்களையெல்லாம் பாராட்டாத மித்திரன், இவர்களுடைய படங்களையெல்லாம் எழில்மிகு முறையில் வெளியிட்டு மகிழும் உள்ளம் அமைக்கப் பெறாத மித்திரன், இவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புக்களையெல்லாம் தீட்டிக் காட்டிப் பொதுமக்களுக்கு உதவி செய்யாத மித்திரன், இவர்களுடைய அருமை பெருமைகளையெல்லாம் மக்கள் மன்றத்திற்கு அறிமுகப்படுத்தவேண்டியதை அவசியமான தொண்டு என்று கருதாத மித்திரன், பண்டித நேருவையே எதிர்த்து நிற்கும் ஒரு பிரபுதத்த பிரமச்சாரியை மட்டும் ஏன் இவ்வளவு தூரம் போற்றியும் புகழ்ந்தும் பாராட்டியும் துதிபாடியும் களிப்புச் சிந்து இசைத்துக் காட்டுகிறது?

பிரபுதத்த பிரமச்சாரியிடம் அமைந்து கிடக்கும் பண்புகள் என்ன அவ்வளவு சிறந்தவையா?

வேறு யாரிடமும் காணப்பட முடியாத அவ்வளவு உயர்வும் உன்னதமும் நிறைந்தவையா?

நிச்சயமாகப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தியே ஆகவேண்டியே அவ்வளவு முக்யத்துவம் வாய்ந்தவையா?

"என்னதானையா அவருடைய தகுதியும் திறமையும்?" என்று கேட்கிறீர்களா?

மித்திரனே கூறுகிறார் அந்தத் தகுதியை, திறமையை! படியுங்கள் அந்தப் பூரணம் பூண்ட புதுமையை!

"எந்தத் தேர்தலுக்கும் பிரசாரம் அவசியம். ஜனநாயகத்தின் அஸ்திவார அம்சம் இது. இந்த உண்மையை நமது பண்டித நேருவைவிட நன்கு உணர்ந்துகொண்டவர்கள் கிடையாது! பாவம்! தேர்தலில் தமது கட்சி ஜெயிப்பதற்காக, விமானம், கப்பல், மோட்டார், ரயில், மாட்டு வண்டி, சகல சாதனங்கள் மூலமும் பிரயாணம் செய்து, பொதுக்கூட்டங்களில் பேசிப் பேசித் தள்ளினார். மொத்தம் அவர் 23000 மைல்கள் பிரயாணம் செய்திருக்கிறார். தினம் பத்து கூட்டங்களில் பிரசங்கமாரி பொழிந்திருக்கிறார்.

இப்பேர்ப்பட்ட ராஜீய வீரரான பாரதத் தவப்புதல்வர் நேருவுக்கு எதிராக நிற்கும் பிரபுதத்த பிரம்மச்சாரி என்கிற சாது ஒரு புது டெக்னிக்கைக் கையாளுகிறார். அதுதான் மௌனம். இந்த மனிதன் வாயைத் திறந்து வருஷம் முப்பது ஆகிறதாம். பொதுக்கூட்டங்களில் ஒரு பெரிய சிரிப்பைத் தவிர இவர் ஒரு சத்தமும் போடுவது கிடையாது. சிஷ்யர்களைப் பகவன் நாமத்தைப் பாடச் சொல்லிவிட்டு, கையில் ஜாலரா ஏந்தி, மேடைமேல் பரவசத்துடன் கூத்தாடுகிறார். ரொம்ப அவசரமாக ஏதாவது அறிவிக்கவேண்டுமானால் மட்டும் அதை சாக்பீசால் பலகையில் எழுதிக்காட்டுகிறார்."

தெரிந்துகொண்டீர்களா தோழர்களே, பிரபுதத்த பிரமச்சாரியின் அருமை பெருமைகளைத் தெரிந்துகொண்டீர்களா?

"இந்த மனிதன் வாயைத் திறந்து வருஷம் முப்பது ஆகிறது."—இது அவருடைய பண்புகளிலே ஒன்று.

"பொதுக்கூட்டங்களிலே ஒரு பெரிய சிரிப்பைத் தவிர அவர் வேறு ஒரு சத்தமும் போடுவது கிடையாது."—இது அவருடைய அருமைக் குணங்களிலே மற்றொன்று.

'சிஷ்யர்களை யெல்லாம் கூப்பிட்டு பகவந் நாமத்தைப் பாடச் சொல்லுகிறார்,"—இது அவருடைய திருக்கல்யாண குணங்களிலே இன்னொன்று.

'கையில் ஜாலரா ஏந்தி மேடைமீது கூத்தாடுகிறார் பரவசத்துடன்.''—இது, அவருடைய சீர்சிறப்புகளிலே வேறொன்று.

வாயை மூடிக்கொண்டிருப்பது!
முப்பது வருஷங்களாகப் பேசாமல் கிடப்பது!
பொதுக் கூட்டங்களில் உரக்கச் சிரிப்பது!
ஜாலராவுடன் மேடைமீது கூத்தாடுவது! இவைகளெல்லாம் அவருடைய அருமைப் பண்புகளாம்! கூறுகிறார் மித்திரனார்!

இவ்வளவுதானா அவருடைய பண்புகள்!

இல்லை! இன்னமும் இருக்கின்றன!

மேலும் பேசுகிறார் மித்திரனார் — கேளுங்கள் அந்த விரிவுரையை:—

"இவரை வெறும் நாடோடி என்று நினைக்க வேண்டாம். வெளிநாடுகளில் பிரயாணம் செய்திருக்கிறார், 1921-வது வருஷத்தில் தாய்நாடு திரும்பியதும் துறவறம் பூண்டு, கங்கைக் கரையில் ஆசிரமம் அமைத்துக்கொண்டு பாகவதத்தை எழுதலானார். இதுவரை கிருஷ்ணன் கதையை 60-பாகங்களில் எழுதியிருக்கிறார். இன்னும் 60 பாகங்கள் எழுத உத்தேசமாம்.

"சென்ற அக்டோபரில் ஒரு நாள் இவர் திடீரென மௌனநிலையிலிருந்து கண் விழித்து ஹே நாத நாராயணா என்று கூவினாராம். சென்ற முப்பது வருஷங்களில் இவர் பேசிய பேச்சு இது ஒன்றுதானாம். இவர் கூச்சலைக் கேட்ட சிஷ்யர்கள் காகிதமும் பேனாவும் கொண்டுவந்து கொடுத்தார்கள். அதில் பிரும்மசாரி எழுதினார்:—இன்று நான் தேர்தலுக்கு நிற்க உத்தேசித்திருக்கிறேனென்றால் அதற்குக் காரணம் என் அந்தராத்மாவின் ஆணைதான்."

அந்தராத்மா ஆணையிட்டதாம் — ஆகவேதான் தேர்தலுக்கு நிற்கிறாராம்.

ஹே நாத நாராயணா என்று கூவினாராம் — அதுதான அவர் பேசிய ஒரே பேச்சாம்.

கூச்சலைக் கேட்டு சிஷ்யர்கள் ஓடிவந்தார்களாம் — காகிதத்தில் ஏதோ எழுதிக் காட்டினாராம்.

இவ்வளவு விபரீதப் பாதையிலா செல்லுகிறார் அந்த விசித்திரபுருஷர் என்று கூறத்தோன்றும் உங்களுக்கு.

யாரையா இவர் சுத்தப் பித்துக்குளியாக இருக்கிறார் என்றுகூடக் கூறுவீர்கள் நீங்கள்.

இப்படிப்பட்ட பத்தாம் பசலிகளையும் பஞ்சாங்கக் குப்பைகளையும் ஒழித்துக் கட்டினால்தான் நாடு உருப்படும் என்று உங்களிற் சிலராவது சொல்லத்தான் செய்வீர்கள்.

இத்தகைய பழமைப் பித்தர்களின் பிடியில் இந்தியா சிக்குண்டு கிடந்த காரணத்தால் தான், அது இவ்வளவு சிதைந்து போயிருக்கிறது என்று நீங்கள் சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால் பழமைப்பித்தர்—பத்தாம் பசலி—பஞ்சாங்கக் குப்பை என்றெல்லாம் சித்தரிக்கப்பட்டு எல்லா முற்போக்குச் சக்திகளாலும் எள்ளி நகையாடி ஒதுக்கப்படத்தக்க இந்த சனாதனஉருவத்திற்குத்தான் பிரமச்

தமான விளம்பரமும் மகத்தான பாராட்டுரையும் தந்திருக்கிறது மித்திரன்.

அரசியல் அறிவு மிகுந்த டாக்டர் கிருஷ்ணசாமிக்குத் தராத விளம்பரத்தை—டாக்டர் சுப்பராயனை முறியடித்த பேபி கந்தசாமிக்குக் கொடுக்காத பாராட்டுரையை—பணக்கோட்டையைத் தோற்கடித்த திருக்குறள் முனுசாமிக்கு அளிக்காத புகழ்மொழியை—தியாகத்தியில் குதித்தெழுந்த ஏ.கே. கோபாலனுக்குத் தராத போற்றித் திரு அகவலை, ஜாலரா ஏந்தி மேடை மீது கூத்தாடுவதைத் தவிர வேறு ஒரு சிறப்புப்பண்பு மற்ற ஒரு நாடோடி நாயகருக்குத் தந்திருக்கிறதே மித்திரன், அதன் காரணமென்ன என்று தெரிய வேண்டுமா உங்களுக்குப்?

மேலும் படியுங்கள் மித்திரனை! கிடைக்கும் உங்களுக்கு விளக்கம்!

"நேருவின் ஹிந்துச் சட்டத் தொகுப்பு மசோதாவை எதிர்த்தே இவர் தேர்தலுக்கு நிற்கிறார். இந்த மசோதா சட்டமானால் ஹிந்து மதம் அழியும்; ஜாதிக் குழப்பம் ஏற்படும்; வேத சாஸ்திரங்களின் அடிப்படை தளர்ந்துவிடும்; ஹிந்து நாகரிகமே சீரழிந்துவிடும் என்று அவர் கருதுகிறார்."

மித்திரனார் எழுதுகிறார் இதுபோல! நேருவையே எதிர்த்து நிற்கிறார் பிரபுதத்த பிரமசாரி என்ற போதிலும் அவருடைய அருமை பெருமைகளை அழகுற எடுத்து விளக்குகிறது மித்திரன் என்றால் அதற்குரிய காரணம் ஏதென் என்பது இப்போது தெரியவில்லையா உங்களுக்கு?

இப்போதுள்ள ஹிந்துலா என்கிற சட்டப்படி, பிராமணன்—க்ஷத்திரியன்—வைசியன்—சூத்திரன் ஆகிய நான்கு வருணத்தாருள் ஒரு வருணத்தார் இன்னொரு வருணத்தாரைத் திருமணம் செய்துகொண்டால் அது செல்லாது.

அதுபோலவே, இந்த நான்கு வருணத்தாருள் ஒரு வருணத்தார் இன்னொரு வருணத்தாரில் உள்ள சிறுவரைத் தத்து எடுத்துக்கொள்வதும் செல்லாது.

ஆனால் டாக்டர் அம்பேத்காரரால் கொண்டுவரப்பட்ட ஹிந்து சட்ட மசோதா சட்டமாகி விட்டால் நான்கு வருணத்தாரில் ஒரு வருணத்தார் இன்னொரு வருணத்தாரைத் தத்தும் எடுத்துக் கொள்ளலாம்; திருமணமும் செய்துகொள்ளலாம் இரண்டு செல்லுபடியாகும்.

இன்றைய ஹிந்து லா, ஜாதிய தத்துவத்தை—அதாவது வர்ணாஸ்ரம தர்மத்தை—அதாவது பிராமணீயத்தை நிலைநாட்டுகிறது. இந்தப் பிராமணீயத்தின் கொடுமையை ஓரளவுக்குக் குறைக்கிறது ஹிந்து சட்ட மசோதா.

நாட்டிலே நாலாயிரம் சாதிகள் இருக்கவேண்டும், அந்த சாதிகளிலே ஒன்றை மற்றொன்று என்றென்றும் பகைத்துக்கொண்டிருக்க வேண்டும். அந்த சாதிகளெல்லாம் இப்படி தங்களுக்குள்ளே தீராத பூசலையும் பகையையும் கொண்டவையாய் ஓயாத போராட்டத்தில் ஈடுபட்டிருந்தாலும், அந்த சாதிகள் அத்தனைக்கும் மேலான உயரத்தில் நிற்கும் பிராமண சாதியினருக்கு அவை அத்தனையும் அடிமைகளாய், தாழ்ந்தவர்களாய், ஏவலர்களாய் விளங்கவேண்டும். அந்த சாதிகள் ஒவ்வொன்றும் தங்களுக்குள்ளே, நீ உசத்தி நான் உசத்தி என்கிற உயர்வு தாழ்வுப் போராட்டத்தில் ஈடுபட்டு, ஒன்றை ஒன்று பகைத்துக் கொண்டிருக்கிற வரையிலேதான், பிராமண சாதி, சமுதாயத்தின் எஜமானனாக, பிறவிமுதலாளியாக, நாட்டின் தலைவனாக ஏக ஆதிபத்யம் செலுத்த முடியும் அப்படியின்றி, எந்தக் காரணத்தாலாவது சாதி பேதங்கள் தொலைந்து, பிறவி காரணமாக உயர்வு தாழ்வு கற்பிக்கும் மடமை மறைந்து, எல்லோரும் ஓர் குலம் என்னும் மொழிவழி மக்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளத் தொடங்கி விட்டால் பிராமண ஏகாதிபத்யம், அதன் பிறகு நிலைத்து நிற்க முடியாது.

இந்த ஜாதியம்தான் பிராமணீயத்தின் அடிப்படை. இந்தப் பிராமணீயம்தான் இந்து மதத்திற்கு உயிர் நாடி.

ஜாதியம், என்பது வேர். பிராமணீயம், என்பது அடித்தண்டு. இந்துமதம், கலாசாரம், நாகரிகம், வேதம், புராணம், சாத்திரம் என்பன வெல்லாம் இலைகள், தழைகள், கிளைகள் போன்றவை.

ஜாதியம்—பிராமணீயம்—இந்துயிசம் இவை மூன்றும் ஒன்றை ஒன்று பற்றி வளர்கின்றன. ஒன்றிற்கொன்று ஆதாரமாயிருக்கின்றன.

இவை மூன்றிலே எந்த ஒன்று அழிந்தாலும் மற்ற இரண்டும் அழியும். எந்த ஒன்று வாழ்ந்தாலும் மற்ற இரண்டும் வாழும்.

எனவேதான், ஜாதியத்திற்கோ அல்லது இந்து மத புராண கலாசாரத்திற்கோ துளியளவு ஆபத்து என்றாலும், பிராமணீயம் பதைக்கிறது; துடிக்கிறது; அலறுகிறது; ஆஹா ஊஹூ என்று பயங்கரக் கூச்சல் எழுப்புகிறது.

ஹிந்து சட்டத் தொகுப்பு மசோதா ஜாதியத்திற்கு ஒரு அடி கொடுக்கிறது. மிகவும் பலமான அடிகூட அல்ல. சாதாரண அடிதான். ஆனால் அந்த அடி விழுந்தால்கூட ஜாதியம் ஓரளவு சிதையும். ஜாதியம் அப்படிச் சிதைவதாலே பிரமமணீயமும் ஒரு அளவுக்குத் தன் பலத்தை இழக்கும். பிராமணீயத்தின் பலம் அப்படிக் குறைவதாலே பிராமண வகுப்பினரின் செல்வாக்கு சற்று குறையும்.

எனவேதான் மித்திரனும் சரி, மித்திரனைப் போலவே பண்பும் பழக்கமும் படைத்த தினமணிகள் கல்கிகள் விகடன்கள் பாரததேவிகளும் சரி, இந்த சட்டத் தொகுப்பு மசோதாவை எதிர்த்துப் பெருங் கூச்சல் எழுப்பின.

பிராமணீயத்தின் செல்வாக்குக்கு ஓரளவு ஆபத்தைத் தருகிறது ஹிந்துச் சட்ட மசோதா. அந்த மசோதாவை எதிர்த்து, அந்த எதிர்ப்பையே முக்கியப் பிரச்சினையாக்கித் தேர்தலுக்கு நிற்கிறார் பிரபுதத்த பிரமச்சாரி. ஆகவேதான் அவரைப் புகழ்கிறது, பாராட்டுகிறது போற்றுகிறது, வாழ்த்தி வரவேற்கிறது மித்திரன்.

அவர் நேருவையே எதிர்க்கிறார்—எதிர்த்தாலென்ன—பிராமணீயத்திற்கு ஏற்பட இருக்கிற ஆபத்தைத் தடுக்கிறாரே—தன் குல ஆதிக்கம் துளியும் சிதையாமல் இருக்க வழிவகை தேடுகிறாரே—அவரைப் பாராட்டாமல் இருக்கலாமா—அது சரியா—முறையா என்று கருதுகிறது மித்திரன்.

பிராமணீயம் என்றென்றும் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்பது மித்திரனின் பேராவல்.

நேருவை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிடும் பத்தாம் பசலி மனப்போக்காளரின் ஆசையும் அதுதான்.

ஆகவேதான் மித்திரன் அவரை ஆதரிக்கிறது—அவர் நேருவையே எதிர்க்கிறார் என்றபோதிலுங்கூட!



கலைஞன்

வேலை - வில்லவன்

கொள்ளைத் தலைவனின் பதிலைக் கேட்டதும் பரிவின்பனின் வியப்பு, ஒரு வரம்பைவெட்டிப் பிடிக்க முடியாத நிலையை யடைந்துவிட்டது. அன்று அவன் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும், அறிந்துகொண்ட உண்மைகளும் ஒன்றற்கொன்று எவ்வளவு சம்பந்தமுடையனவாக இருந்தன என்பதை அவன் எண்ணிப் பார்த்துக்கொண்டான். தன் தந்தை பாலைநாட்டுப் பட்டரைப்பற்றிக் கூறியதற்கும், கலையரசர் இன்பதாசன் அவனைப்பற்றியும் வெளிவராமலிருக்கும் உண்மைகள் பலவற்றைப்பற்றியும் சொல்லியதற்கும், கொள்ளைத்தலைவன், கோமளவர்மன் என்ற உண்மை வெளியானதற்கும் இருந்த அந்தக் 'கோர்வை', தான் காண்பது நாடகமா அன்றிக் கனவா என்று அவனை ஐயுறவைத்தது. வியப்பு, மகிழ்ச்சி, விணரைவிழ்த்தவேண்டுமென்ற வேதனை கலந்த, மானம் தோய்ந்த வீர உணர்ச்சி, கோமளன் கூறப்போகும் அவன் வரலாறு பூராவையும தெரிந்துகொள்ளத் துடிக்கும் ஆர்வ உணர்ச்சி ஆகிய இத்தனை உணர்ச்சிகளும் பரிவின்பனைபபற்றி யணைத்துக் கொண்டன.

அத்தனை உணர்ச்சிகளினூடே மற்றொரு உணர்ச்சியும் அவனைப் பற்றிக்கொண்டு அவன் மனத்தைக் கிள்ளியது. 'சந்தேகம்' என்ற அந்த உணர்ச்சி அவன் அதரங்களை அசையவைத்தது.

"உமக்கு மக்களிடமிருந்து வந்து குவிந்துள்ள மடல்களில் உம்மை அவர்கள் 'வெற்றிவீரன்' என்றல்லவா விளித்தெழுதி யிருக்கிறார்கள்?"

"ஆமாம். ஆமாம். அதுவும் என்னுடைய பெயர்தான். அந்தப் பெயர் எல்லை யணைந்த விதத்தை நீர் என் வரலாறு முழுவதையும் கேட்டால் தெரிந்துகொள்வீர். அதைப்பற்றியெல்லாம் விளக்கமாகச் சொல்லுகிறேன். தொடர்ந்து நான் என் வரலாற்றைச் சொல்லுகிறேன் கேளும்!"

பரிவின்பன் அதற்கு அமைதியான முறையிலே தன் ஆமோதிப்பைத் தலையை யசைத்துத்தந்தான். கோமளவர்மன் தன் வரலாற்றைத் தொடர்ந்து கூறலானான்:

"நண்பரே, தூக்குமேடைமீது நின்றுகொண்டிருந்த என் தந்தை கடைசியாக என்னை யொருமுறை முத்தமிட விரும்பி மேடைக்கழைத்தாரென்று கூறினேனல்லவா? நான் தூக்குமேடைக்குக் கொண்டு செல்லப்பட்டேன். மக்கட் கூட்டத்தினிடையே அமைதி நிலவியது. அந்த அமைதியிலே ஆச்சரியம் சுழ்ந்துநின்றது. அந்த அமைதியையும, ஆச்சரியத்தையும், அங்கு நின்றுகொண்டிருந்த மக்களத்தனைபேரையும் சிறிதும் சட்டைசெய்யாமல் நின்றுகொண்டிருந்த என் தந்தையின். வற்றி வரண்டுபோயிருந்த உதடுகளுக்கிடையே, மகிழ்ச்சி ஒரு புன்னகைக் கோட்டினை யுண்டாக்கிற்று! அந்தச் சிரிப்பிலேதான் எவ்வளவு உணர்ச்சி! எத்தனை அர்த்தம்! பணக்காரனின் சிரிப்பு — பயங்கரச் சிரிப்பு—பணம் பட்டம் பதவி ஆகியவை இதயத்தை இரும்பாக்கி அதனுள்ளிருக்கும் மனிதத் தன்மையை வெளியேற்றி சோரம் போய்விட்ட அந்தப் பிண்டத்தை ஒரு உலுக்கு உலுக்கி வெளிவரும் சிரிப்பு—ஏழை மக்களை சித்திரவதை செய்யக்கூடும். என் தந்தை அப்பொழுது சிந்திய அந்தச் சிரிப்பு, இலேசான புன்னகை, பணக்காரனின் சிரிப்பு மக்களின் கண்களிலே நீர்தளும்பச் செய்வதைப் போல, என் கண்களிலும், அங்குக் கூடியிருந்தோர் அத்தனை கண்களிலும் நீரைத் தளும்பச் செய்தது! ஆனால் பணக்காரனின் ஆணவம்தோய்ந்த, பெருமைவழியும் சிரிப்பைப் போன்றதல்ல என் தந்தையின் அதரங்களுக்கிடையே தவழ்ந்து நின்ற அந்தச் சிரிப்பு! அதிலே வீரமும் அஞ்சாமையும் மிதந்தன. அன்பும் அவைகளோடு இழைந்திருந்தது. அந்தச் சிரிப்பு, அங்கு ஆணவமிகுதியோடு நின்றிருந்த பாஷாணபூபதிக்கும் அவன் பரிவாரங்களுக்கும் தரப்பட்ட சாட்டையடி! அங்கு திரண்டிருந்த மக்கட்கூட்டத்திற்கு அது ஒரு அபாய அறிவிப்பு! 'உங்கள் வருங்காலத்தை எப்படி யமைத்துக் கொள்ளப்போகிறீர்கள்?' என்ற கேள்விக்குறி! சோரம்போனவர்களாக இருக்கப்போகின்றீர்களா அல்லது மானமிழக்காது, மதிமயங்கிடாது உங்களின நன்மைகாகவும் நாட்டின் சுபிட்சத்திற்காகவும் வீரப் போராட்டம் நடத்திடப்போகிறீர்களா? என்ன செய்யப் போகின்றீர்கள்?' என்ற கேள்வி அந்தச்சிரிப்பிலேதவழ்ந்தது! அந்நேரத்திலே குருதியிலேகொதிப்பேற்படாமல் நின்றுகொண்டிருந்த ஒரு சில புரட்சிவீரர்களுக்கு அது ஒரு தூண்டுகோல்! வீர உரை! தூக்குமேடையிலே என் அன்புத் தந்தையால் வாரியணைத்துக்கொள்ளப்பட்ட எனக்கு அது துயரைத்தரும் கருவியாகவும், உணர்ச்சியைத் தட்டியெழுப்பி ஊக்குவித்திடும் தூண்டுகோலாகவும் அமைந்தது. எந்த அளவிலே கண்ணீர் என் கண்களிலே தளும்பியதோ அதே அளவிலே என் மனத்திலே வீர உணர்ச்சி பொங்கியெழுந்தது. அந்த வீர உணர்ச்சி என் கண்ணீருக்கு ஒரு கொதிப்பைத்தந்தது. அந்தத்தூக்குமேடையிலும், என்னை இறுகக் கட்டியணைத்துத் தழுவிக் கொண்ட என் தந்தையின் மீதும் அந்தக் கண்ணீர்த்துளிகள்—கோழையின் கண்ணீரைப் போன்றில்லாது கொதிப்புமிகுந்த அந்த நீராவிக் கண்ணீர்த்துளிகள்—விழுந்தன! அந்தக் கண்ணீர்த்துளிகள்

தாம் நான் கொண்டுள்ள சூள் உரை! அவைகளின் அடிப்படையிலேதான் இன்று வாளேந்துகிறேன்!

"நண்பரே, என்னை இறுகத் தழுவிக்கொண்ட என் தந்தை, 'கண்ணே கோமளா, நான் சொல்லியது ஞாபகமிருக்கிறதா?' என்று, அந்த உணர்ச்சிச் சிரிப்பிலே தவழ்ந்து வந்த அன்புமொழியால் கேட்டார். 'நினைவிருக்கிறதப்பா!' என்றேன். நண்பரே, அப்பொழுது மீண்டும் அந்த உணர்ச்சி வீரரின் அதரங்களைப் பிளந்து கொண்டு வந்த அந்தச் சிரிப்பு! மன மகிழ்ச்சியையும் திருப்தியையும் அப்படியே அப்பட்டமாகப் பிரதிபலித்துக் காட்டிய அந்த அன்புச்சிரிப்பு!... இனி எப்பொழுது காண்பபோகிறேன் அந்தச் சிரிப்பை! இனி அந்தச் சித்திரம் என்னால் காணமுடியாததொன்றாயினும், 'எப்பொழுதும் அதன் நிழல் என் கண் முன்னே தோன்றி நின்றுகொண்டேயிருந்து எனக்கு ஆறுதல் தருகிறது. ஊக்கம் பிறப்பிக்கிறது!.....

"நண்பரே, மீண்டும் என் தகப்பனார் பேசினார். 'ஆமாம்' கோமளா, நான் கண்டதாக உன்னிடம்கூறிய கனவு நிச்சயம் உன்னால் நனவாக முடியும். நீ கோழையல்ல. கோழைத்தனம் நம் பரம்பரையையே அண்டிஅறியாத தொன்றல்லவா? நீ ஒரு சுத்த வீரனின் அருமை மைந்தனடா! உன்னுடைய பால்யப் பருவமே எனக்கு உன் வாலிபப் பருவத்தின் முறுக்கைத் தெளிவாக எடுத்துக்காட்டிவிட்டது! கண்ணே நான் கூறியது ஞாபக மிருக்கட்டும்; நாட்டின் விடுதலைக்காக அஞ்சாமல் போரிடு! வீணர்களை வீழ்த்தத் தவறாதே!......கோமளா உன் அன்புத்தாயை அந்திய காலத்தில் ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்!...' என்று கூறி என்னைத் தன் ஆசைதீர முத்தமிட்டார். அவர் கண்களிலிருந்துக் கண்ணீர்த் துளிகள் வெளிவந்தன. கொதிப்பைக் கொண்ட எங்களிருவரின் கண்ணீரும் ஒன்றோடொன்று கலந்தன. நான் தூக்குமேடையிலிருந்து கீழே கொண்டுவரப் பட்டேன்! என் தாய் மூர்ச்சையாகி விழுந்து விட்டிருந்தாள். என் தந்தை! ஆ!... ஆம் நண்பரே, என் அருமைத் தந்தை, உணர்ச்சிவீரர், பாலை நாட்டிலே பெருவீரராகத் திகழ்ந்து படைப்பலத்தை அதிகப்படுத்திய அந்த அருமை வீரர் திலகம், தூக்குக் கயிறு தன் மேனியை இறுக்கிடத் தன் ஆவியைத் துறந்துவிட்டார்! இரு தருவங்களிலிருந்து இளம்பிய பரிசுகளைப் பெற்றுவிட்டார் அவர். ஆரியம் அவருக்குத் தூக்குக் கயிற்றைப் பரிசாக அளித்தது. மானங்கொண்ட மக்களிடமிருந்து 'விடுதலை வீரர்' 'தியாகி' என்ற பட்டங்களையும் விருதுகளையும் பரிசாகப் பெற்றுவிட்டார் அவர்.

"நண்பரே, நானும் என் தாயாரும் அதன் பின்பு வாழ்ந்த வாழ்க்கை!...வேதனையும் வருத்தமும் எங்கள் வாழ்க்கைக்கு வேலியாக அமைந்து விட்டன. வறுமை, வேலியிடப்பட்ட எங்கள் வாழ்க்கைக் கொட்டகைக்குள் எங்களை நன்றாக வாட்டிச் சித்திரவதை செய்தது: சாப்பாடில்லாமல் நாங்கள் கழித்த நாட்கள் தாம் எத்தனை! வயிறு வாடிய, உடல்நலங்குன்றி, உள்ளம் தளர்ந்திட்ட நிலையில் நாங்கள் வாழ்க்கையை ஓட்டிச் சென்றோம். இளம் பருவத்திலேயே இன்னல்களிலே சிக்கித் தவித்திட்ட அன்னைப்பற்றி என் தாயார் எவ்வளவு விசாரங்கொண்டிருக்கிறாள் தெரியுமா? எவ்வளவு கண்ணீர் வடித்திருக்கிறாள்! என்னைப்பற்றிய சிந்தனையில்—என்னுடைய சிந்தனையில்-என்னுடைய குழந்தைப் பருவகோலாகல வாழ்வையும் அப்போதைய அவலம் மிகுந்த வாழ்வையும், வருங்கால வாழ்வையும் ஒன்றோடொன்றை யிணைத்துப் பார்த்து மனம் வெதும்பிய நிலையில் எத்தனை இராப்பொழுதுகளைத் தூக்கமில்லாமல் அவள் கழித்திருக்கிறாள் தெரியுமா? என்னுடைய பால்யப்பருவ சொகுசான வாழ்வு அவள் மனதைக் கிள்ளிவிடும். அப்போதைய வறுமை வாழ்வு அவள் மனத்திலே தீயைக்கொட்டும். என் வருங்கால வாழ்வைப்பற்றிய அவள் சிந்தனை அவளுக்கு ஓரளவிலே பயத்தையும் மகிழ்ச்சியையும் தந்திடும்!

"வறுமையினூடே நான் வாழ்ந்துகொண்டிருந்த அந்தக் காலத்திலேயே என் உடலிலே இருந்த முறுக்கும், துடிப்பும், மானம் மிகுந்த தன்மையும் ஓரளவிலே அவளுக்கு மகிழ்ச்சியைத் தந்தாலும் பயத்தையும் அவை அவள் உள்ளத்திலே அள்ளிக்கொட்டின. தெருப்பிள்ளைகளோடு விளையாடிக்கொண்டிருக்கும்போது எவனாவது நியாயமற்ற முறையில் நடந்து கொண்டால், இன்னொருவனை நியாயமில்லாத முறையில் தாக்கினால் நான் அதைச் சகித்துக்கொண்டிருக்கமாட்டேன். என் மனத்தின் நடுநிலைமையையும், உடலின் சக்தியையும் எடுத்துக் காட்டிட ஆரம்பித்து விடுவேன். இப்படிப்பல முறை நான் பல சிறுவர்களைத் தாக்கியதுண்டு. நீதிக்காகப் போராடியதுண்டு. அது என் அன்னைக்கு மிகுந்த பயத்தைத் தந்தது- "ஊர்வம்பிற்குச் செல்லாதேடா ராசா!" என்பாள். "ஊர்வம்பு" எது, "நியாயம்" எது என்று தத்துவம் பேச ஆரம்பித்திடுவேன், என்னுடைய பேச்சு அவளின் தாய்மையைத் தொடும்! தான் ஈன்றெடுத்த மகனின் மனத்தெளிவும், பேச்சும் செயலும் அப்பொழுது அவளை மூழ்கிட வைக்கும்: அந்த மகிழ்ச்சி மின்னலைத் தொடர்ந்து ஒரு பேரிடி உண்டாகும், ஆமாம். அந்தப் பேரிடி "புகார்" வடிவிலே பெற்றோர்களிடமிருந்து கிளம்பும். "வீட்டிலே அடக்க உன்னால் முடியவில்லையென்றால் ஊரிலே நாங்கள் அடக்கி விடுவோம்!" என்ற அளவுக்கு அதன் ஒலியிலே 'அழுத்தம்' இருக்கும். என் தாயாரின் கெஞ்சுதல் குரல், மன்னிப்புச் சிந்து கிளம்பும்! அப்பொழுது என்னைப் பார்க்கவேண்டுமே! களத்திலே வெற்றிகண்டு வாகைசூடி வீடடைந்த காளையின் முகத்திலே அரும்பிடும் புன்னகை என் முகத்திலே தவழ, நீதியும் உடல் வலிவும் நம்பக்கம் இருக்கும்போது பயமேன்? என்ற எண்ணம் மனதிலே மிதந்திட நாசுக்காக நின்றிருப்பேன்! "ஏனம்மா அவர்களிடமெல்லாம் கெஞ்சிக் கூத்தாடி மன்னிப்புக் கேட்கிறாய்? நியாயம் நம் பக்கம் இருக்கும்போது அஞ்சாமல் யாரிடமும் வாதாடுவதால் என்ன குறை இருக்கிறது?". என்பேன். அவள் கண்ணீர் கண்களிலே ததும்ப, "நியாயத்திற்காக நாம் வாதிட்டால், பிறகு இந்த நாட்டிலே நியாயத்தைவிட சக்தி பொருந்தியதாகவுள்ள அநியாயம் நம் நியாயத்தையும் நம்மையும் அழித்துவிடும்! அப்பாவின் கதியை எண்ணிப்பார்!', என்றிடுவாள். "நியாயத்திற்காகப் போரிடத்

(16-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சாயலாக இருந்தாள் குழந்தை சண்பகம்! என் துன்ப வாழ்விலே இன்பமளித்து வந்தாள்! வரண்ட வாழ்விலே வளங்கொடுத்து வந்தாள்! அவள் வாழ்வே என் வாழ்வு அவள் நலன் என் நலன், அவளுக் குழைப்பது என் பணி, கடமை என்று எண்ணி, அவளை என் கண்ணின் கருமணிபோல் காத்துவந்தேன். பாலைவனத்தின் மத்தியிலே பசுமரம்! வளர்ப்பது போல் வளர்த்து வந்தேன். அவளும் நன்றாகவே வளர்ந்து வந்தாள். எனக்கு ஒரு வரட்டு ஆசை, அவளைப் படிக்கவைக்க வேண்டுமென்பது. அந்த ஆசைக்கு இணங்க அவளைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தேன். இப்பொழுதும் பள்ளிக்குச் சென்று வந்துகொண்டுதானிருக்கின்றான். இப்பொழுது அவளுக்கு வயது பத்து ஆகிறது.

நான்கு நாடகங்களுக்கு முன் களைப்படைந்து அந்தி நேரத்தில் வீட்டை அடைந்தேன், சண்பகம் ஓடிவந்து என்னை அன்போடு அணைத்துக் கொண்டாள் நானும் ஆசையாகத் தூக்கி முத்தமிட்டேன். அந்தச் சிறிது நேரத்தில் எனக்கிருந்த உடல்வலி யெல்லாம் மறைந்து மனத்தில் புதிய இன்பம் பெருக்கெடுத்தது. சிறிது நேரம் தன் பாடசாலையில் நடந்தவற்றையெல்லாம் மழலைச் சொல்லில் சொல்லிக் கொண்டிருந்தாள். திடீரென்று ஏதோ எண்ணிக் கொண்டாள் போலிருக்கிறது. மலர்ந்த தாமரைபோல் இருக்கும் அவள் முகத்தில் மாலைக்கால இருள் படரத் தொடங்கியது. உற்று நோக்கினேன். பிறகு உள்ளதென்னவென்று கேட்டேன். "அப்பா! இன்னிக்கு பத்மா பள்ளிக்கூடத்துக்கு ஒரு புது பச்சைப் பாவாடை கட்டிவந்தா...ரொம்பநல்லா இருந்தது. அது பொங்கலுக்கு அவுங்க அப்பா எடுத்த துணிகளிலே ஒண்ணும்...அதுபோல எனக்குக் கூட ஒண்ணு பொங்கலுக்கு எடுத்துத் தற்றயாப்பா..." என்று கூறிவிட்டு நம்பிக்கையோடு என்னையே பார்த்தாள். அவள் குரலிலே அன்பு குழைந்திருந்தது.

எனக்கு அப்படியே தலைசுற்றுவதுபோலிருந்தது. என்னபதில் சொல்வது? எதையோ நினைத்துக் கொண்டு "அதற்கென்ன ஆகட்டும் கண்ணே" என்றேன். அப்பொழுதுதான் அவள் சிரித்தாள், சிரித்துக் கொண்டே இருந்தாள். ஆனால் நானோ அவளைப்பார்த்து அழுதேன்! அவளுக்குத் தெரியாமல் தான்! என் எண்ணம் எங்கெங்கோ சுழன்றது. "பத்மா! அவளுக்கென்ன? கருப்பு மார்கட்டில், பகல் கொள்ளையடிக்கும் பரமேஸ்வரனின் மகள்! ஒன்றென்ன ஒன்பது ஜதைகூட தைத்து அணிந்து அழகு பார்க்கலாம், சண்பகம்! பாவம்! குழந்தை! தகப்பனின் நிலை தெரியாமல் கேட்கின்றாள். அன்றாடக் கஞ்சிக்கு நான் படும் துன்பம் அவளுக்கெங்கே தெரியப்போகிறது. தெரியவும் கூடாது" என்பதுதான் என் எண்ணம். ஆசைப்பட்டுக் கேட்கிறாள், வாங்கிக் கொடுக்கத்தான் வேண்டும். ஆனால் பணம்...அதுதான் இல்லை! மடியைத் தடவிப்பார்த்தேன். அன்றைய வருமானம் ஆறணாதான் இருந்தது. நான் படும் துன்பம் போதாதா, அவள் வேறு மனமுடைய வேண்டுமா என்றுதான் "ஆகட்டும்" என்றேன்.

* * *

நாளைக்குப் பொங்கல்! சண்பகத்தின் சொல் என்னை அரித்துக் கொண்டே இருந்தது. ஓடி ஓடி கூலி என்று கூறினேன். மாலையும் நெருங்கியது. மடியைத் தொட்டுப்பார்த்தேன். இவ்வளவு நாள் வயிற்றுக்குக்கூட உண்ணாமல் சேர்த்து கூலியில் சம்பாதித்த பணம் இரண்டு ரூபாயும் எட்டரையணாவும் கிடந்தன. பட்டுப் பாவாடை என்றால் குறைந்ததுபதினைந்து ரூபாயாவது வேண்டாமா! என் மூளைகுழம்பியது! பொழுது விடிந்தால் பொங்கல்! ஆனால் நான் சண்பகத்திற்குக் கொடுக்க வேண்டிய பொங்கல் பரிசிற்குத்தான் வழியைக் காணோம்!

மக்கள் சாரை சாரையாகச் சென்றுகொண்டிருந்தனர். புதிய சினிமாவின் நினைவு வந்தது. கொட்டகையை நோக்கி நடந்தேன். "என்ன உலகமடா, இது, ஏழைக்கே நரகமடா" என்று கொட்டகையில் ஒலி பெருக்கி அலையிட்டுக் கொண்டிருந்தது. சிறிது நேரம் போவோர் வருவோரைப் பார்த்துக் கொண்டே நின்றிருந்தேன். மலர்ந்த முகத்தோடு அங்கு நடமாடும் மக்களைக் கண்டு ஏனோ என் உள்ளத்தில் பொறாமைத்தீ மூண்டது. "பணத்தை ஆடம்பரமாகச் செலவிடும் இவர்கள் ஒரு சிறிய தொகையை, சிலகாசுகளைப் பிச்சையாகக் கொடுத்தால் கூட என் வாழ்வுவளமடையுமே நம்மிடமிருந்தாலே நயவஞ்சகமாகப் பறிக்கும் இவர்களா உதவுவார்கள்" என்று எண்ணியவாறே நின்றிருந்தேன். அப்பொழுது சங்கீதம் பாடும் காலணிகளை யணிந்த ஒரு கனவான் காரிலிருந்து இறங்கிவந்து உயர்ந்த வகுப்பு டிக்கட் வாங்கும் வரிசையிலே நின்றார். அவருடைய மணிபர்சிலிருந்த கத்தை நோட்டுகள் என் கண்ணைப்பறித்தன. நானும் அவர் பின்னால்போய் வரிசையில் நின்றேன். என் உள்ளம் செய்யத்தகாத ஒன்றைச் செய்யும்படி என்னைத் தூண்டியது. உண்மையைக் கூறிக்கேட்டால் ஒரு காசு கூட கொடுக்கமறுக்கும் இவர்களிடம் செய்தால் தான் என்ன என்ற எண்ணம் உதித்தது. ஒருமுறை சுற்றிப்பார்த்தேன். ஒருவரும் என்னைக் கவனிக்கவில்லை என்று தெரிந்தது. அவருடைய மணிபர்ஸ் இருக்கும் பக்க ஜேபியில் மெதுவாக விரலைநுழைத்தேன். என் இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. பயம் என்னைப் பற்றி இழுத்தது. ஆனால் சண்பகத்திடம் எனக்கிருந்த அன்பு கையை உள்ளேபோ என்று கூறியது. மெதுவாக மூச்சுவிட்டேன். பர்சு கையில் தென்பட்டது. அதை லேசாகப் பிடித்தேன். என் உடல் மெதுவாக நடுங்கத் தொடங்கியது. திருடியே அறியாத என் கை வெடவெடவென நடுங்கியதை அவர்உணர்ந்து கொண்டார்போலிருக்கிறது. திடீரென்று என்கைகளை இறுகப் பிடித்தார். இரத்தமே உறைந்துவிட்டதுபோலிருந்தது எனக்கு! பலமான இரண்டு அறைகள் விழுந்தன என் கன்னத்தில். பிறகு நினைவு இழந்தேன். இப்பொழுது இங்கே இருக்கின்றேன். இதுதான் என் வாழ்வு" என்று சந்தனம் கூறி முடிக்கவில்லை—தொடர்ந்தான்:

"ஐயா, ஒரு சிறு வேண்டுகோள். அதைநிறை வேற்றவேண்டியது தாங்கள். என்மகள் சண்பகம் என்னை எதிர்நோக்கி ஏங்கிக் கொண்டிருப்பாள். அவளை நான் இப்பொழுது பார்ப்பதற்குத் தாங்கள் தயவு செய்யவேண்டும்,

ஊருக்கு வெளியில் தெரியும் மைதானத்தில் இரண்டு குட்டிச்சுவர்கள் தெரியும். அந்த சுவற்றின் மேல் செல்லரித்த ஓலைகளும், ஒடிந்த கழிகளும் தொங்கும். அது தான் என் வீடு! யாரையாவது அனுப்பி, உடனே அழைத்துவரச் சொல்லுங்கள். இந்த நன்றிக்கு என்னால் பதில் நன்றி எதுவும் செய்ய முடியாது எனினும் என் உள்ளத்தில் உங்கள்பால் நன்றி இருக்கத்தான் செய்யும்" என்று கூறி முடித்தான் சந்தனம். அவன் கூறியதை யெல்லாம் மௌனமாகக்கேட்டுக் கொண்டிருந்த இன்சுபெக்டர், "சரி" என்று அவனுக்குச் சம்மதமளித்தார். "144! இவனைக் கொண்டுபோய் உள்ளே வை" என்று கூறும் பொழுது அவர் குரலில் கம்பீரத்தைவிடக் கரகரப்புதான் அதிகமாக இருந்தது. பாவம், அவரால் என்ன செய்யமுடியும் அவர், சட்டத்திற்கு வேலி!

அந்த அறை அவன் உள்ளத்தைப் போல் இருண்டிருந்தது. விளக்கின் ஒளி லேசாகப் படர்ந்தது. அதைத் தொடர்ந்து வந்த கானிஸ்டேபிளுடன் சண்பகத்தைக் கண்ட சந்தனத்திற்குக் குப்பென்று கண்களில் நீர் நிறைந்தது! இரும்புக் கதவைத்திறந்துகொண்டு இருவரும் உள்ளே வந்தனர். "சண்பகம்" என்று அன்போடு கட்டியணைத்துக் கொண்டான் அவளை. அவள் விம்மி விம்மி அழுதாள். "ஏம்பா இங்கே இருக்கறே? வூட்டுக்கு வரலயா?" அவள் குரலில் சோகம் நிறைந்திருந்தது. அவன் பதிலே பேசவில்லை. அந்த இளஞ்சிறுமியை அப்படியே கட்டியணைத்துக் கொண்டிருந்தான். அவன் கண்கள் நீர் வீழ்ச்சியாக இருந்தன. எவ்வளவு நேரம் இப்படி இருந்தானோ! அது அவனுக்கே தெரியாது.

"உம் 'கௌளந்த' வாமமா நேரமாச்சி!', என்ற குரல் கேட்டு உணர்வு பெற்றனர்!

"நீ கதவைப்பூட்டிடு. நான் எங்க அப்பா கூடவே இருக்கப்போறேன்" என்றாள் சண்பகம். சந்தனம் ஒன்றுமே கூறவில்லை. "உம நேரமாகுது, வாம்மாண்ணு......" கான்ஸ்டேபில் குரல் கொஞ்சம் கடுமையாகவே இருந்தது. சண்பகத்தின் கையைப் பிடித்து இழுத்தான். பலமாக இழுத்தான். அவள் தன் தகப்பனைக் கெட்டியாகப்பிடித்துக் கொண்டிருந்தாள் போலீஸ்காரன் அவள் வரமறுக்கிறாள் என்று தன் மிருக பலத்தால் அவளை வெளியே இழுத்தான். அவனுடைய ஒரு கையில் விளக்கு மினுக் மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தது. அவன் இழுத்த வேகத்தால் உட்புறமாகத் திறந்திருந்த இரும்புக் கதவில் மோதிக் கொண்டாள் சண்பகம். கண்ணாடி சாமானைக் கருங்கல்மேல் போட்டால்? விளைவு என்ன ஆகும்? சொல்லவா வேண்டும்? "ஐயோ... அப்பா" என்ற அபயக் குரல் கேட்டு சந்தனம் திடுக்கிட்டு அவள் அருகில் ஓடினான். அவள் தரையில் கிடந்தாள். அவள் உடலிலிருந்து இரத்தம் மெதுவாக சுரந்துகொண்டிருந்தது. அவளைப் புரட்டினான். உணர்ச்சி இல்லை. வழிந்தோடும் குருதி கண்டதும் அவனுக்கு என்ன தோன்றியதோ! அழவில்லை! கூச்சலிடவில்லை! போலீஸ்காரனை உற்று நோக்கினான்! சந்தனத்தின் கண்களில் தீப்பொறிகள் பறக்கக்கண்ட போலீஸ்காரன் அப்படியே அசைவற்று நின்றுவிட்டான்.

சந்தனம் எழுந்தான். போலீஸ்காரன் அருகே சென்று அவன் சட்டையைப் பிடித்தான், கழுத்தைப்பிடித்துப் பின்புறமாகத் தள்ளிக் கொண்டே சென்றான். அவனைச் சுவற்றில் சாய்த்துத் தன் பலங்கொண்ட மட்டும் அவன் கழுத்தை நெறித்தான். முதலில் போலீஸ்காரனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தன்னை ஏதோ செய்யப்போகின்றான் என்பது தெரியும். ஓடிவிடலாமென்றாலோ கால்கள் எழவில்லை. சப்தம்செய்ய நா எழவில்லை. செய்வதறியாமல் திகைத்தான். சந்தனத்தின் செய்கைகளுக் கெல்லாம் மரக்கட்டை போல் இருந்தான் அவன்.

சந்தனம் அவன்கழுத்தை நெறித்துக் கொண்டே இருந்தான், போலீஸ்காரன் கையிலிருந்த விளக்கு கீழே உருண்டது. சந்தனத்தின் முகம் பயங்கரமாகமாறியது. சண்பகத்தின் அருகே சென்றான். "கண்ணே! சண்பகம்......இதோ பரிசு! பொங்கல் பரிசு" என்று கூறி தன் கையில் வழியும் இரத்தத்தை அவள் கன்னங்களில் தடவினான். திடீரென்று இரண்டு பேர் அவனை இறுகப்பிடித்தனர்.

"அடபாவி! 144ஐக் கொலை பண்ணிட்டானே!" என்றான் ஒருவன்.

"யார் நானா கொலைசெய்தேன்... ஆஹ்...ஹா ஹம் செத்தானா, ஒழியட்டும்!" என்று அவர்களையும் மீறித்தள்ளி எழுந்தபடி தன் இடையிலிருந்த துணியைக்கிழித்து கையில் உள்ள இரத்தத்தில் துடைத்து, "சண்பகம்! இங்கேவா பாவாடைபார்...பச்சைப் பாவாடை...பரிசு... இந்தா" என்று கூறி ஒரு கானிஸ்டேபிளின் கழுத்தில் சுற்றினான்.

"அடே ஆளுக்குப் பைத்தியம் புடிச்சிப் போச்சி, கெட்டியாகப் பிடி இவனை, பிடடா" என்று தங்களுக்குள் பேசிக்கொண்டே சந்தனத்தை வெளியே இழுத்துச் சென்றனர் கானஸ்டேபில்கள்.

"சண்பகம்...ஐயோ ரத்தம்... பரிசுவேணுமா! கொலை! கொலை!! உம்பாவி செத்தானா ஒழியட்டும். ஆஹ் ஹ்ஹ..."—அவன் குரல் அந்த ஸ்டேஷன் முழுவதும் எதிரொலித்தது.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சபையில் அட்டைகள்போல் ஒட்டிக்கொண்டிருக்கிற அக்கிரமம் நடக்காது.

ஆனால் என்ன செய்வது? இந்த நாட்டின் அரசியல் திட்டம்தான் அக்கிரமத் திட்டமாக இருக்கிறதே!

அந்தத் திட்டம் சுக்குநூறாகக் கிழித்தெறியப்பட்டு, வேறு ஒரு சிறந்த ஜனநாயகத் திட்டம் தீட்டப்படுகிற வரையிலே, இப்படிப்பட்ட அக்கிரமங்கள் ஒன்றல்ல, ஓராயிரம் நடந்து கொண்டுதான் இருக்கும்.

ஹிட்லரிசம், பத்தாம் பசலித்தனம், முதலாளித்வம், வைதீகம், இவற்றின் தொகுப்புத்தான் இன்றைய அரசியல் திட்டம்.

இந்தத் திட்டம் ஒழிந்தாக வேண்டும் இந்தியா உருப்பட வேண்டுமானால்.

இந்த உண்மையைத்தான் இன்றைய தேர்தல், மு[illegible] சறைந்து தெரிவிக்கிறது—எ லோருக்கும்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

காமராஜர்களே! காமராஜர்களே! ஏன் திகைக்கிறீர்கள்?

பரிசுகளைக் காணோமே—வெறும் பெயர்கள்தானே இருக்கின்றன என்று எண்ணி விழிக்கிறீர்களா?

பரிசுகள்தான் இவை—புரியவில்லையா?

மக்கள் மன்றம் உங்கட்கு அளித்துள்ள அன்பளிப்புகள்தான் இவை—அறிந்துகொள்ள இயலவில்லையா உங்களால்?

நீங்கள் சென்ற ஐந்து ஆண்டுகளாக அகில இந்தியாவையும் ஆட்சி புரிந்துவந்தீர்கள் அல்லவா?

அந்த ஆட்சியின் மாட்சியை வியந்து பாராட்டி, இந்திய மக்கள் உங்கட்கு அளித்துள்ள உயரிய பரிசுகள்தான் இவை—ஏன்? தெரியவில்லையா?

இங்கே தரப்பட்டிருக்கின்றனவே இருபத்தேழு பெயர்கள், இவை, இதுவரை, தோல்விப் பள்ளத்தில் வீழ்ந்துபோனதாக அறிவிக்கப்பட்டிருக்கிற காங்கிரஸ் மந்திரிகளின் பெயர்கள்!

ஆமாம் காமராஜர்களே, இதுவரை இருபத்தேழு காங்கிரஸ் மந்திரிகள் தோற்றுப்போயிருக்கிறார்கள்.

சென்னை ராஜியத்திலே மட்டுமல்ல காங்கிரஸ் மந்திரிகள் தோற்றுப்போயிருப்பது!

மத்ய பிரதேஷ்—ஒரிசா—பீகார்—மேற்கு வங்காளம்—ராஜஸ்தான்—மத்திய பாரத்—பம்பாய்—மைசூர்—ஒவ்வொரு இராஜ்யத்திலேயும் தோல்விப்படலத்தைத்தான் வாசித்திருக்கிறார்கள் தேசிய மந்திரிகள்!

தோற்றுப் போயிருப்பவர்களும் சாதாரண மந்திரிகளல்ல! சட்டம், சிறை, நிதி, மராமத்து, கல்வி, சுகாதாரம், உணவு, இப்படிப்பட்ட பொறுப்பும் சிறப்பும் உள்ள முக்கியமான துறைகளைத் தங்களிடம் வைத்திருந்த முக்கியமான மந்திரிகளெல்லாம் தோற்றுப்போயிருக்கிறார்கள்!

சென்னை, மத்ய பாரத், ராஜஸ்தான் ஆகிய மூன்று இராஜ்யங்களில் பிரதம மந்திரிகளே தோல்வித் தோட்டாவை அணிந்துகொள்ளும் பெரும் பேறு பெற்றிருக்கிறார்கள்!

ஆகமொத்தம் இருபத்தேழு காங்கிரஸ் மந்திரிகளைப் படுதோல்வி அடையச் செய்திருக்கிறார்கள் இந்தியத் துணைக்கண்டத்துப் பொது மக்கள்!

இந்த இருபத்தேழு தோல்விகளைத்தான், காங்கிரசு ஆட்சிக்குப் பொதுமக்கள் அளித்துள்ள இருபத்தேழு பரிசுகள் என்று நான் குறிப்பிட்டேன்—குற்றமா அது?

பசி, பஞ்சம், பட்டினி, லஞ்சம், ஊழல், சிறைவாசம், தடியடி, துப்பாக்கிக் குண்டுகள்—இவற்றைத்தான் பொதுமக்களுக்குரிய பரிசுகளாகத் தந்தது சென்ற ஐந்தாண்டுக்கால காங்கிரசு ஆட்சி.

எனவேதான் மந்திரிகளின் தோல்வி இருபத்தேழினைக் காங்கிரசு ஆட்சிக்குரிய சிறந்த பரிசுகளாகத் தந்துள்ளனர் பொதுமக்கள்!

பசியையும் பஞ்சத்தையும் பொதுமக்களுக்குப் பரிசுகளாக அளித்தவர்கள், வெற்றியையும் வாழ்த்துரையையுமா பொதுமக்களிடமிருந்து பரிசுகளாக எதிர்பார்க்கமுடியும்? தோல்வியையும் தூரப்போ என்கிற வாசகத்தையும் தானே எதிர்பார்க்கமுடியும்?

பசியையும் பஞ்சத்தையும் கொடுத்துவிட்டு அவற்றிற்குப் பதிலாக வெற்றியையும் வாழ்த்தையும் எதிர்பார்த்தால், எதிர்பார்ப்பவர்கள் வேண்டுமானால் விஷயம் தெரியாத வீணர்கள் என்ற பட்டத்திற்கு ஆளாகலாமே தவிர, பொதுமக்கள் என்ன அவ்வளவு ஏமாந்தவர்களா? எனவேதான் தோல்விப் பரிசுகள் இருபத்தேழினைக் காங்கிரஸ் மந்திரிகளுக்குக் கனிவுடன் கொடுத்திருக்கிறார்கள் அவர்கள்.

என்ன செய்யலாம் காமராஜர்களே! தினை விதைத்தவன் தினையைத்தானே அறுக்க முடியும்? கேழ்வரகைப் போட்டவன் கேழ்வரகைத்தானே எடுக்கமுடியும்? விதைக்கு ஏற்ற பலன்தானே கிடைக்கும்? கம்பு விதைத்துவிட்டு நெல் கிடைக்கவில்லையே என்றால் எப்படிக் கிடைக்கும்? உங்கள் மந்திரிகள் முன்பு செய்த காரியத்திற்குத் தகுந்த பலனைத்தான் இப்போது பெற்றிருக்கின்றனர் பரிசாக! வேறுபரிசு கிடைக்கவில்லையே என்றால் எப்படிக் கிடைக்கும்?

எங்கேயோ அவசரமாகப் போய்க்கொண்டிருந்தீர்கள் — தடுத்து நிறுத்திவிட்டேன்—என்ன அவசரமோ—எந்த எதிர்க் கட்சித் தலைவரை எவ்வளவு வேகமாக ஏசிப் பேசவேண்டுமோ—எந்தத் தி. மு. க. தோழரை எவ்வளவு கேவலமாகத் திட்டவேண்டுமோ—எந்த சந்துமூலை சிந்து கடையர்களைக் கூப்பிட்டு என்னென்ன வார்த்தைகளைக் கற்றுக்கொடுத்துத் தரவேண்டுமோ — எவ்வளவோ வேலை இருக்கும் உங்களுக்கு—இங்கே நிறுத்திவிட்டேன் இவ்வளவு நேரம் — போய்வாருங்கள், காமராசர்களே, போய்வாருங்கள்!

அடடே! வெறுங்கையுடன் போகிறீர்களே! இதோ இருக்கின்றனவே அந்த இருபத்தேழு பரிசுகள்! ஒன்றுவிடாமல் எடுத்துக் கொண்டு போங்கள்!

(13-ம பக்கத் தொடர்ச்சி)

தயங்கிடாதே! என்று அப்பா எனக்கு அடிக்கடிச் சொல்லியிருக்கிறார் அம்மா!'' என்று பதிலளித்திடுவேன். அவள் என்னைக் கட்டியணைத்து முத்தமிட்டுக் கண்ணீரால் என் முகத்தை நனைத்திடுவாள். அவள் அப்பொழுது பார்த்திடும் அந்தப் பார்வையில் தாய்மையின் மகிழ்ச்சியும், வருத்தமும் பின்னிக்கொண்டு காட்சி தரும்.

நண்பரே, ஆண்டுகள் ஓடிக் கொண்டேயிருந்தன. நான் வாலிப பருவத்தை எட்டிப்பிடிக்கும் நிலைமையை யடைந்துவிட்டேன். ஆம். எனக்கு அப்பொழுது பதினேழு அல்லது பதினெட்டு வயதிருக்கும். அப்பொழுது என் வாழ்க்கையில் பெரிய புயல் வீசலாயிற்று! அன்னையோடு நடத்திவந்த வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டுவிட்டது. அந்தக் கதை உமக்கு விளக்கமாகக் கூறிவிடுகிறேன். உம்முடைய ஐயங்கள் யாவும் தீர்ந்துவிடும்!'' என்று கூறிவிட்டு கோமளவர்மன் நாவறட்சி மிகுந்துவிட்டதால் அங்கிருந்த மணியொன்றையடித்தான். ஒரு பணியாள் வந்து நின்றான். பழரசம் வேண்டும் என்று பணித்தான். பழரசம் மூவருக்கும் கொண்டுவரப்பட்டது. மூவரும் பருகினர். (தொடரும்)

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B.A. (Hons.)